Tom Brown

V 6 No. 7 16 Feb 1933

3L
007211, N128 KN
N33.6.7
189140

KALANILAYAM தனிப்பிரதி விலை அணு மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ௵ பிப்ரவரி ௴ 16௳ [No. 7

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 121
2. அப்பர் (64 கலை - வியாகரணம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 123
3. வில்லிபாரத விளக்கம் (சூது போர்ச் சருக்கம்) T. S. நடராஜப் பிள்ளை B. A. B. L. 124
4. கதிரைமலைக் காதல் க. வேலுப் பிள்ளை 126
5. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 128
6. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 129
7. காற்றுமழை (அங்கம் 1. களம் 2.) Shakespeare's - Tempest 131
8. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 132
9. பொதிகை நிகண்டு (உகராதி) S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 134
10. யாப்பிலக்கணம் (இசை) வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 135
11. பொருளீட்டல் C. சுந்தரம் ஐயர் B.A., 136
12. வர்த்தமானம் 139

## கலாநிலயம்

189140

### சொன்னல் விரோதம் 6.

ஒவ்வோருவருந் தத்தமை ஒவ்வோரிடத்தில் அறவே துறந்துநிற்குந் தூய்மையே வாழ்வாங்குவாழ்கின்ற மேன்மை யென்றும், அங்ஙிலைக் கேற்றவாறு மணவினை முதலியன அமைந்திருக்கின்ற நாகரிகமே சிறந்ததென்றும் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் தம் விழுமிய மொழிகளால் விளக்கினர். எல்லோருந் தம்மைக் கடவுளினிடத்தில் துறந்துகொள்ளவேண்டுமென்ற தத்துவத் துணிவின் காரியமாங் கிளைத் தோற்றங்களாக, ஆடவர் தம் ஆசிரியர்களிடத்தும், பெண்டிர் தம் கொழுநரிடத்தும் தம்மைத் துறந்து நிற்கவேண்டு மென்பதன் இன்றியமையாமையை, ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்தம் மொழிகளினின்று நாம் தெளிந்துகொள்ளவேண்டும். அத்துறவினிற்கு மாறாக நாம், நம்முடைய சுதந்தரங்களைக் காத்துக் கொள்வதென்னும்பொய்ம்மையின்வாய்ப்பட்டுமுன்னேற்றம் என்னும் பெயரால் செய்கின்ற முயற்சிகளெல்லாம் (Most progress is most failure, என விளம்பும் ஆங்கில கவி ராபர்ட் ப்ரோனிங் என்பவர் மொழிந்தவாறு) அவலமேயாய் முடியுமென்று எண்ணுவது மாத்திரமன்றி அன்னவாறே முடிந்து கொண்டு வருவதையும், கண்ணிருப்பவர்களெல்லாரும் காண்கின்றவர்களாவார்.

கல்வியும் அறிவும் ஆராய்ச்சியும் அவைகளால் பெருகும் தூய்மையும் உடையவர்களுக்கன்றோ ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் போன்ற சான்றோர்தம் பெருமை தெரியும்? கலாசாலைப் பட்டங்கள் பெற்ற வளவிலேயும், அதுவுமின்றி வர்த்தமானப் பத்திரிகைகளைக் கைவிடாமற் படிப்பதனலேயும், ஒரு படிப்புமில்லாமல், இருட்டிற் கஞ்சாத குருட்டுக் கண்களேபோல், துணிவுமிகப் பெற்றிருக்கின்றஎண்ணிறந்தோர் அறிவென்ற பெயரால் அலமரச் செய்யுமொரு பிழைமலிந்த பேச்சுக்களைக்கேட்டும், தத்தமைக் கற்றவர்களாகக் கருதிக்கொள்கின்ற இக்காலத்தில், ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளனைய மூதறிவுடையோரைப் "பண்டையுலகப் பண்டிதர்" எனப்பேசி மதிக்காமலிருந்துவிடுவார். ஆதலின், மேனாடுகளிலும், கல்வியினகலமும் சிந்தனையின்செறிவும் உடைய அறிவாளிகள் இத்தகைய கருத்தையே போற்றியிருக்கின்றனர் என்பதை உணர்த்தல் நலம்.

ஹிப்போலைட் அடால்ப் டேய்ன் (Hippolyte Adolphe Taine) என்பவர் ப்ரான்ஸ் தேயத்தைச் சேர்ந்தவர். மேல்நாடுகளில் வழங்கும் மொழிகளிலுள்ள இலக்கியங்களவ்வளவும், க்ரீக் லத்தீன் முதலிய மொழிகளையும் கற்றுத் துறைபோயவர். இவர் ஆங்கிலேய இலக்கியங்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து தம் ப்ரெஞ்ச் பாஷையில் அரிய பெரிய நூலொன்று எழுபது வருடங்களுக்குமுன் எழுதினர். அந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றது. கீழ்வரும் இப்பாகத்தை அம் மொழிபெயர்ப்பினின்று எடுத்து எழுதுகின்றோம்:—

#### Female Characters.

In Shakespeare you will meet them (a troop of sweet and timid figures, pre-eminently tender-hearted, the most graceful and loveworthy whom it has been given to man to depict) in Miranda, Juliet, Desdemona, Virgilia, Ophelia, Cordelia, Imogen, but they abound also in the others; and it is a characteristic of the race to have furnished them, as it is of the drama to have represented them. By a singular coincidence, the women are more of women, the men more of men, here than elsewhere. The two natures go each to its extreme: in the one to boldness, the spirit of enterprise and resistance, the warlike, imperious, and unpolished character; in the other to sweetness, devotion, patience, inextinguishable affection—a thing unknown in distant lands, in France especially so: [Hence the happiness and strength of

the marriage tie in England; while in France it is but the association of two comrades, tolerably alike and tolerably equal, which gives rise to endless disturbance and bickering]. A woman in England gives herself without drawing back, and places her glory and duty in obedience, forgiveness, adoration, wishing and professing only to be melted and absorbed daily deeper and deeper in him whom she has freely and forever chosen ‡. It is this, an old German instinct, which these great painters of instinct diffuse here, one and all: Panthea, Dorothea in Ford and Greene; Bianca, Ordella, Arethusa, Juliana, Euphrasia, Amoret, and others, in Beaumont and Fletcher: there are a score of them who, under the severest tests and the strongest temptations, display this wonderful power of self-abandonment and devotion. The soul, in this race, is at once primitive and serious. Women keep their purity longer than elsewhere. They lose respect less quickly; weigh worth and character less suddenly: they are less apt to think evil, and to take the measure of their husbands. To this day a great lady, accustomed to company, blushes in the presence of an unknown man, and feels bashful like a little girl; the blue eyes are dropped, and a childlike shame flies to her rosy cheeks. English women have not the smartness, the boldness of ideas, the assurance of bearing, the precocity with which the French make of a young girl in six months, a women of intrigue and the queen of a drawing-room. Domestic life and obedience are more easy to them. More pliant and more sedentary, they are at the same time more concentrated and introspective and more disposed to follow the noble dream called duty which is hardly generated in mankind but by the silence of the senses. They are tempted by the voluptuous sweetness which in southern countries is breathed out in the climate, in the sky, in the general spectacle of things, which dissolves every obstacle, which causes privation to be looked upon as a snare and virtue as a theory. They can rest content with dull sensations, and dispense with excitements, endure weariness; and in this monotony of a regulated existence fall back upon themselves, obey a pure idea, employ all the strength of their hearts in maintaining their moral dignity. Thus supported by innocence and conscience they introduce into love a profound and upright sentiment, abjure coquetry, vanity and flirtation; they do not lie or simper. When they love they are not tasting a forbidden fruit, but are binding themselves for their whole life. Thus understood, love becomes almost a holy thing; the spectator no longer wishes to be spiteful or to jest; women do not think of their own happiness, but of that of the loved ones; they aim not at pleasure but at devotion.

‡ See the representation of this character throughout English and German literature. Stendhal, an acute observer saturated with Italian and French morals and ideas, is astonished at this phenomenon. He understands nothing of this kind of devotion, "this slavery which English husbands have had the wit to impose on their wives under the name of duty."

வாழ்வாங்கு வாழ்கின்ற விழுப்பத்தின் அழகில் தழைத்த உணர்வுடைய புலமையோர் சிந்தனையைச் செவ்விதின் தேர்ந்து உவகையுடன் எடுத்துரைக்கின்ற ப்ரான்ஸ் தேயத்து டேய்ன் என்பவர் தம் மொழிகள் நம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் தம் மொழிகளைப் பெரும்பாலும் தழுவியிருக்கின்ற செம்மையைச் சிந்தித் துணர்வோர்க்கு ஊதியம் பெரிது உளது. ஆங்கில மாதர்களின் அருமையை ஒரம் சாராமற் காட்ட வருகின்ற அவ்வறிஞர், தம் தேய மாதர்களுக்கு அதனுல் இழுக்கு நேர்கின்றதென்பதையும் பொருட்படுத்தவில்லை. தம்முடைய இன்பத்தையேனும் சுகத்தையேனுங் கருதாமல் கடமையில் கருத்தைநாட்டி, கொழுநன்குணத்தினை அளக்காமல், அவன் எத்தன்மயனுயினும், பண்பும் பயனுமுடையராய் ஒழுகும் உத்தமிகள் தம் மேன்மையை இனிது உணர்த்தினர். அவர், 'கடமை' என்றுரைப்பது நமது 'தர்மம்' என்னுங் கருத்தினுள் அடங்கும். தருமத்தை நடத்துதல் என்னுஞ் சிந்தனை யின்றி, அவரவர் இன்பத்திற்குரியன இயற்ற வேண்டுவதே தகுதியென்னும் துணிவு வாழ்க்கையுள் இடம்பெற்று விவகரிக்கப் புகுமாயின், பிறகு டேய்ன் உரைப்பதேபோல், "கற்பு என்பதெல்லாம் கையாளமாட்டாத வொரு கொள்கையாகவும் நிறையென்பதெல்லாம் பேதையரைப் படுப்பதற்கமைந்தவொரு பறியாகவும்," உணர்வுதிரிந்து கருதற்கியன்றனவாய்க் கழியாமல் என் செய்யும். புலன்களின் வாயைப் பொத்தினலன்றி விழுமிய தருமத்தின் கனவேனும் காணமாட்டோம், என்கின்றார் டேய்ன். தன்னுடைய புலன்களை வாயடைத்து வைப்பதற்குத் தன்னைக் கரைத்துருக்கி வேருெருவர்பால் கலந்துகொள்ளும் துறவே வேண்டற்பாலது என்பது சான்றோரனைவரும் செப்புகின்ற துணிவாய் நிற்கின்றது. இதனைத் தருமம் என்ற கருத்தினில் ஆன்றோர் அடக்குகின்றனர். "நீ உன் கடமையை ஒருவனுக்கு நேராகச் செலுத்தினுலும், அவன் உன்னிடத்துச் செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்தாத கொடியவனு யமைவானுயின், அதற் கென்ன செய்வது" என்று பிறக்கவல்லவோர் ஐயத்தினை, எமர்ஸன், "அவனைப்பற்றி நீ நினைக்கவேண்டா; அவன் கெட்டவனுயிருந்தால், நீ உன் கடமையைச் செலுத்துவதில் இன்னும் பதின்மடங்கு அதிகம் கவனமுடன் ஒழுகுவதே கடனுகின்றது. நீ உன் தருமத்தைச் செய்யவேண்டியது, மற்றவர் தம் தருமங்களைச் செய்கின்றார்களோ இல்லையோ என்பதைப் பொருந்திய தொன்றன்று" என அறிவுறுத்தித் தெளிவிக்கின்றார். ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் சொல்லியதும் இதுவே. எமர்ஸன் பழையகாலத்துப் பண்டிதர் இனத்தைச் சேர்ந்தவரல்லர்.

மணவாழ்க்கை நடத்தும் முறையில் இந்தத் தத்துவத்தை உட்கொண்டு ஒழுகிய மங்கைமார் சிலர் செய்தியை டேய்ன் என்பவர் ஆங்கில இலக்கியங்களினின்று எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அவைகளிற் சிலவற்றை அடுத்தவாரம் வரைவோம்.

## Cross - Word Puzzle No 1.

**Result**

The following persons have sent correct solutions:—

S. Balakrishnan, Kombay; R. Thirumalai Jackiah, Kombay; A Suruliandy, Kombay; K. Alla Pichai; Kombay; C. M. Namasivayam, Kombay; T. V. Srinivasan, Namagiripet; A. K. Velu Pillai Ceylon; V. N. Ramaswami Aiyangar, Sankari; Muthu K. M. M. Arunachalam Chettiar, Devakottah; V, Muthukumaraswnmi Chettiar, Madras; A Ramu Pillai, Colombo; A. K. Chengalvaraya Chettiar, Madras; V. T. Ramaswami Aiyar, Trichengodu; U. R. Sarangapani, Udumalpet, U. N. Alagarswami Naidu, Udumalpet; U. V. Rajalakshmi, Udumalpet: U. S. Narayana Aiyar, Udumalpet, S. M. Yasodai Ammal, Udnmalpet. P. K. Ramalingam Chettiar, Panruti. C. E. Raman Nair, Madras.

**Prize Winner :—C. M. Namasivayam, Kombay.**



# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[108-வது பக்கத் தொடர்ச்சி]

இக்காலத்தில், ஐயருக்கு அய்யர் என்று எழுதுவதுபோல் அப்பர் காலத்தார் எழுத உடன்படவில்லை. முன்செய்யுளில் "செய்ய" வென்று மூன்றுவதடி துவக்குவதால் எதுகைக்கு "அய்யர்" என்பது அழகாய் நிற்கும்; எனினும், அவ்வாறு அப்பர் காலத்தில் அப்பதத்திற்கு அத்தகைய எழுத்துச் சேர்க்கை வழக்கமில்லை. ஆகையால், நமது வழக்கிலுள்ள எல்லாத் தமிழ்மொழி எழுத்துக்கோவைகளையும், அப்பர்தேவாரத்தின்படி திருத்துவோமாயின், நாம்நமது மொழியைச் சீராக்குவோமென்பது திண்ணம்.

தேவாரத்தில் ஐகார மாத்திரமன்று; ஔகாரமும் அகர வகரங்களாக எழுதப்பட்டிருப்பதுண்டு. ஆயினும் எழுத்துவழக்கில் அகரவகரங்களைப் பிரயோகிக்கின்ற இடங்களில் ஔகாரமும், ஔகாரம் பிரயோகிக்குமிடத்து அகரமும் வகரமெய்யும் வழங்குதல் காணப்படவில்லை (உ - ம்)

ஔவ தன்மை யவரவ ராக்கையான்
வெவ்வ தன்மைய னென்ப தொழிமினோ
மௌவ னீண்மலர் மேலுறை வானொடு
பௌவ வண்ணனு மாய்ப்பணி வார்களே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 13.

"பவ்வம்" என்று பௌவத்திற்குப் பதிலாய் அப்பர் காலத்தில் எழுதப்படவில்லை. அக்காலத்தில் சம்பந்தர் செய்யுள் ஒன்றை நோக்குக.

பௌவ மார்கட லிலங்கையர் கோன்றனைப்
பருவரைக் கீழூன்றி
எவ்வந் தீரவன் றிமையவர்க் கருள்செய்த
விறையவ னுறைகோயில்
மவ்வந் தோய்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
கவ்வை யாற்றொழு மடியவர் மேல்வினைக்
கனலிடைச் செதிளன்றே.

திருவம்பர் மாகாளம் - பண் - நட்ட ராகம் 8.

"எவ்வம்" என்பதற்கு எதுகைக்காகவும் "பௌவத்தை" மாற்றுதது காண்க.

ஆயினும் "கவ்வை" என்பது "கௌவை" யென்று எழுதப்பட்டிருக்கவில்லை. இதையறியாது, நச்சினார்க்கினியர், "ஔளபாகுமிடனுமா ருண்டே, தேருங் காலை மொழிவயி னான" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் ஔகாரக் குறுக்கத்திற்கு, "கௌவை நீர் வேலி கூற்று" என்று உதாரணந்தருகின்றார். ஔவை யென்று வழக்குண்டாயிருக்க அதனை, "அவ்வை" யென்று எழுவது எவ்வளவு இழுக்கோ அவ்வாறே கவ்வை யென்பதை "கௌவை" யென வெழுதுதல் இழுக்கென்பதை அவர் உணர்ந்திலராய்க் காணப்படுகின்றார். பெரும் புலவரான நம்பியாரூரர் வழக்கும் "கவ்வை" யே யாம்.

கவ்வைக் கடல்கதறிக்
கொணர்முத்தங் கரைக்கேற்றக்
கொவ்வைத் துவர்வாயார்
குடைந்தாடுந் திருச்சுழியற்

றெய்வத்தினை வழிபாடு
செய்தெழுவா ரடிதொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவ
ரலராள்பிரி யாளே.

திருச்சுழியல் - பண்-நட்டபாடை 3.

ஆதலால் ஒரு பதத்திலுள்ள ஓசையைப்பற்றிஇருவகைகளில் எழுத்துக்களைக் கூட்டியெழுதலா மாயினும், பெரும்பாலும் ஒருவகையே ஆமோதிக்கக்கூடியதாய் நிற்கின்றது. பண்டைநூல் மூலச் சூத்திரத்துச் செய்யுட்களி லில்லாதவற்றை, உரையிற்கோடலென்னும் தமது கருவியால் நுழைப்பாராயின், மாணவர், மூலமாகிய முதநூற் கூற்றின் உறுதிமொழிபோல் உரையாசிரியர் கூற்றும் உறுதிமொழியென்று எண்ணுமல், அக்கூற்றின் நுழைவை நமது சமயகுரவர் திருமுறை மூலங்களாற் பரிசோதித்துப் பின்னரே உரையிற்கோடல் பொருந்துமோ வெனத் துணிதல் வேண்டும். உரையாசிரியர்கள் கல்வியிற் சிறந்த நிபுணராதலால், அவர் கூற்றிலுள்ள குற்றம் வெளிப்படையாய்த் தோன்றுது. ஆகையால் உரையாசிரியர் யாவராயினும், அவரது கல்வியின் மேன்மையால் மயங்காமல் அவர் உரை மூலத்திற்கு எவ்வளவு பொருந்துமென்பதை ஆராய்ந்தே அம்மட்டும் ஆமோதிப்பது நலம். இவ்வகையில் அப்பர் தேவாரமும் அதன் மரபும் தொல்காப்பியனுர் எழுத்ததிகாரத்திற்கு மிகவும் பயன்படுவது காணலாம்:—

எழுத்துக்களானவை எகர ஒகரங்களில் உற்பத்தியானகாலம், உயிர் மெய் என்ற ஓசைபேதம் வகுக்காத காலமாகும். குழந்தை பிறந்தபின் அது கண் விழித்து உலகத்தைச் சுற்றிப்பார்த்து, காணும்தோற்றங்கள் யாவை எனத் தெளிந்து தெரிந்துகொள்ளத் தலைப்படும் தன்மையையே எழுத்துக்களின் உற்பத்தியும் ஒத்திருக்கின்றது.

ஒருகாலத் தோன்றாகி நின்றார் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
பெருகாமே வெள்ளந் தவிர்த்தார் போலும்
பிறப்பிடும்பை சாக்காடென் றில்லார் போலும்
உருகாதா ருள்ளத்து நில்லார் போலும்
உகப்பார்தம் மனத்தென்றும் நீங்கார் போலும்
அருகாவந் தென்னை யஞ்சே லென்பா
ரணியாரூர் திருமூலட் டான னாரே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 10.

என்றும்,

நன்றாக நடைபலவு நவின்றார் போலுக்
ஞானப் பெருங்கடற்கோர் நாதர் போலும்
கொன்றாகிக் கொன்றதொன் றுண்டார் போலுங்
கோளரக்கர் கோன்றலைகள் குறைத்தார் போலும்
சென்றார் திரிபுரங்க ளெய்தார் போலுந்
திசையனைத்து மாயனைத்து மானார் போலும்
அன்றாகி லாயிரம் பேரார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே."

ஷை 11.

என்றும் பாடுவது காண்க. மற்றும் அவர் சிவபெருமானைப் "பிண்டத்தைக்காக்கும் பிராணர்" என்றும், "ஒருருவாய்த் தோன்றி யுயர்ந்தார் போலும்" என்றும் "நாட்டகத்தே நடைபலவு நவின்ற ஞானப் பெருங்கடற்கு நாதர்" என்றும் கூறுவது, மானிட அறிவு விருத்தியடையும் விதமும் உற்பத்தியுங் காட்டுகின்றதன்றோ? மாணவர்க்கு இதில் எவ்வகைச் சந்தேகமும் ஏற்பட இடந்தராமல் அப்பர் அத் திருத்தாண்டகத் திருப்பதிகத்தில்,

**இந்திரத்தை யினிதாக வீந்தார் போலும்**
இமையவர்கள் வந்திறைஞ்ச மிறைவர் போலும்
சுந்தரத்த பொடிதன்னைத் துதைத்தார் போலுந்
தூத்தூய திருமேனித் தோன்றல் போலும்
மந்திரத்தை மனத்துள்ளே வைத்தார் போலும்
மாநாக நாணாக வளைத்தார் போலும்
அந்தரத்தே யணியாநஞ் சுண்டார் போலும்
அணியாரூர் திருமூலட் டான னாரே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 8.

என்றனர். "இந்திரம்" என்பது இந்திரனால் இயற்றப்பட்ட ஒரு தமிழிலக்கணம். இவ்விலக்கணம், அகத்தியனார் செய்த சிற்றகத்தியம், பேரகத்தியம் என்பனவற்றிற்கும் முற்பட்டது போலும். அது, எழுத்ததிகாரத்தைச் செவ்வனே விளக்கும் ஒரு தமிழிலக்கணமென்றும் நாம் அறிகிறோம். தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில், இது காட்டப்பட்டிருக்கின்றது:—

வடவேங்கடந் தென்குமரி
யாயிடை
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்தும் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு **திருவிற் பாண்டிய** னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
**வதங்கோட் டாசாற் கரிறபத்** தெரிந்து
**மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி**
மல்குநீர் வரைப்பி **னைந்திர** நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-சிறப்புப்பாயிரம்.

இதனில் எழுத்துமுறை காட்டியிருப்பது மயங்கா மரபென்றும், அது ஐந்திரம்நிறைந்த சாரமென்றும் திருவிற்பாண்டியன் அவைக்களத்தில் நால்வேத நிபுணரான, அதங்கோட்டாசிரியர் முன்னிலையில், கூறிய கடாவிற்கெல்லாம் குற்றம்தீர விடைகூறிப் புகழ்பெருரென்பது விளங்கும்.*

* I have taken only that part of Nachinar-Kiniyar's commentary that is borne out by the text. I would ask my re?ders to beware of this commentary which runs sometimes on too much flight of imagination. With due deference to this learned commentator, I am sorry to say that he assumes and twists facts, not warranted by the text of Tholkappiyam.

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்—சூதுபோர்ச் சருக்கம்

[5-வது வால்யூம் 313-வது பக்கத் தொடர்ச்சி]

"அரசமுறைக்கு ஏற்றவை யல்லவென்று விலக்கப்பட்டவைகளை இங்கு நீ எடுத்துச் சொல்வது எக்காரணம்பற்றி? கொடியவனான துரியோதனனுக்கு நீ முன்செல்ல விரும்புவது ஏன்?' என்று அருச்சுனன் சொல்ல, அதனைக்கேட்ட நகுலசகாதேவர்களும் அத்தினபுரிக்குச் செல்வது தகாதென்றார்கள். இவ்வண்ணம் வீமசேனனும் மற்றையோரும் சொல்லிய மொழிகளைச் செவிமடுத்த தருமனும், தம்பியோர் உரைத்தனவே உண்மையுரைகளாயினும், தளர்ச்சியில்லாத அன்பையுடைய திருதராட்டிரன் சொற்களை மறுப்பது அழகன்று என்றெண்ணினன்.

ஆவி யார்நிலை பெறுபவர்
நீதிகூ ரரியவான் புகழன்றிப்
பாவி யானதங் கனுகுறு
தொழியினும் பலித்திடு நினைவின்றி
மேவி யானுடை யையன்வந்
திருக்கவும் வேரிவண் டெழுமன்றற்
காவி யார்தொடைக் காவல
னேவனு மறுப்பது கடனன்றே.

[நியாயம் மிகுதலின் பயனாக அதன் வழியிற்பெறவல்ல அருமையான சிறந்த புகழையல்லாமல், உயிரையே நிலையாயிருக்கப் பெறுபவர் யார்? வரற்பாலது, நாம் அத்தினபுரியை நெருங்காது நீங்கினும், நமது நினைவு இல்லாமலே வந்து சேரும்; விரும்பி நம்மை யாட்கொள்ளும் சிறிய தந்தை நம்மை அழைத்துச்செல்ல வந்திருக்கவும், கள்ளையுண்ணும் வண்டுகள் மொய்க்கின்ற வாசனை பொருந்திய குவளைமலர் மாலையணிந்த திருதராட்டிரன் கட்டளையை மறுப்பது பிள்ளைகள் செய்யும் கடமையன்று.]

"தந்தையின் கட்டளைப்படி நடப்பது நீதி. அவ்வாறு நடப்பதால் துன்பம் வந்துற்றாலும், உயிருக்கே தீங்குநேரிட்டாலும், உலகத்தார் நம்மைப் பழிக்கமாட்டார். பிள்ளைகள், தங்களுக்கு இடுக்கண் நேருமென்பது தெரிந்திருந்தும், அதைப் பொருட்படுத்தாமல், தந்தை சொற்படி நடப்பதே கடனென்று நியாய வழியில் நின்றாரிவர்என்று நம்மைப் புகழ்ந்து போற்றுவார். நாம் அத்தினபுரிக்குச் செல்வதால் நமக்குத் துன்பமே வருமென்று கொள்வோம்; சூதாட்டினால் நாடினை இழக்கநேரிடுமென்று வைத்துக்கொள்வோம். அதனாலென்? நம்மைநாட்டாரனைவரும் இவர் தந்தை சொற்றவறாத பான்மையர் என்று புகழ்வார்களன்றோ? அப்புகழ் பெறுவது பெரிதோ, அன்றி நாடிழப்பது பெரிதோ? புகழ் என்றும் நிலைபெற்றிருப்பது; நாடு, நதிப் பெருக்காலும், பகைவர் படையெடுப்பாலும் அழியக்கூடியது. நான் நீதிமுறைப்படி நடப்பதால் வரும் புகழையே பெரிதும் பாராட்டுகின்றேன். அதனால் விளைகின்ற துன்பங்கள் ஏதாயினும் ஆகுக.



மேலும் வரற்பாலது வந்தேதீரும். இன்னபடி நடக்கவேண்டுமென்று முன்னரே விதிக்கப்பட்டிருந்தால் அது நமது எண்ணமில்லாமலே வந்துநேரும். கூண்டிற்குள் ளிருக்கும் உணவு, தன்னைப் பிடிக்கவேண்டி வைக்கப்பட்டிருக்கிறதென்பதை உய்த்துணர்ந்து விலகுகின்ற ஓர் எலி, அடுத்து விடங்கலந்து வைக்கப்பட்டிருக்கும் உணவை விரும்பி உண்டு உயிர் துறக்கும். நாம் அத்தினபுரிக்குச் செல்லாவிட்டாலும் வேறு ஓர்வழியில் அத்துயர் வந்தே தீரும். துரியோதனனே கோபத்தால் நம்மேற் படையெடுத்து நாம் இல்லாக் காலத்தில் இந்நாட்டைக் கைப்பற்றுவான்; அன்றி அயல்நாட்டவர் சிலர் அவன் தூண்டுதலால் நம்மீது படையெடுக்கலாம். நானே வேறெவரோ டாயினும் சூதாடி நாடிழக்க நேரிடும். மேலும் உலகத்தில் இன்பமும் துன்பமும் வேவ்வேறானவைகளல்ல. அவையிரண்டும் ஒன்றென்பதே நமது வேதாந்தக்கொள்கை. ஒரு பரிசைப்பெற இருவர் போட்டியிட்டால், அப்பரிசு அவர்களுள் ஒருவனுக்கே கொடுக்கப்படும்; பரிசு பெற்றானுக்கு இன்பம், பெறாதவனுக்குத் துன்பம். பரிசொன்றே வெவ்வேறு முறையில் நோக்க இன்பமும் துன்பமுமாகின்றது. ஆகவே நாம் அத்தினபுரிக்குச் செல்லும் செய்கை துன்பமானதென்று ஏன் நினைக்கவேண்டும்? இன்னொருவன் கருத்திற்கினிமையான வொன்றை நன்மையென்று ஏன் நாம் எண்ணக்கூடாது? அப்படி நன்மையென் றெண்ணினால் நல்லதைச் செய்வதிற் பிழையென்?

"இவ்வேலையைச் செய்ய ஏவியவன் நமது காவலன் தந்தையென்பதை மறப்போம். காவலனைக் கொள்ளின் இந்நாடு முழுவதும் அவனுடையது. அவன் தந்த நிலனை அவனே கேட்பின் கொடுத்துவிடவேண்டியது நீதி. நம்மை வரும்படி ஏவியவன் தந்தை; அழைத்துப்போக வந்திருப்பவனுந் தந்தை. ஆகையால் செல்லத்தவறுவது முறையன்று," என்று தருமன் கூறினன்.

நாளையே தமது தந்தை வாழ்கின்ற அத்தினபுரிக்கெழவேண்டுமென்று உடனே வோர் ஆணைபிறந்தது. அதன்படி முரசறையப்பட்டு மன்னர் பலர் ஆங்கு வந்தடைந்தார்.

ஐந்து பூதமே நிகரெனப்
புலன்களோ ரைந்துமே யெதிரென்ன
வைந்து காவுமே பொருவெனப்
பணிமுடி யைந்துமே நேரென்ன
வைந்து வாளியே யுறழ்வென
வேள்வியோ ரைந்துமே யொப்பென்ன
வைந்து வாசமே தாமென
வைவரு மைந்துதேர் மேல்கொண்டார்.

வில்லிபுத்தூரர் நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்புக்களை வழக்கம்போல் எடுத்துரைக்கவில்லை யென்று முன்னே யொருமுறை சொல்லி யிருக்கின்றோம். அக்காலை, அதற்குக் காரணம் ஒருகால் கதையின் விரிவும் இக்கவி மேற்கொண்ட பணியின் பெருக்குமா யிருக்கலாமென்று உரைத்தோம். ஆயினும் இந்திரப் பிரஸ்த்த நகரைப் பற்றிக் கூறவேண்டிய போது வருணனைகள் வாலாயின. இச் செய்யுள் முதல் பாண்டவர் எழுச்சியையும் அவர்தம் படையின் வகைகளையும், அவர் சென்றவழி யுற்ற மருதம் முல்லை குறிஞ்சி நெய்தல் முதலிய நிலங்களின் வளங்களையும் வில்லி வருணித்துரைப்பதை நோக்கின், எவ்வெப்போது பாண்டவரையும் அவர் நாட்டையும் புகழ்ந்துரைக்கச் சமயம் நேரிட்டதோ அவ்வக் காலங்களிலெல்லாம் அவர் நகரச்சிறப்பையும் நாட்டுச் சிறப்பையும் எடுத்துக்கூறலாயினர் என்று கொள்ளக்கிடக்கின்றது. பாவியரான துரியோதனாதியர்உறைந்த நாடுநகரங்களைச் சிறப்பித்துக் கூற அவருக்கு மனமெழவில்லை போலும்.

இச்செய்யுளில், ஐவராகியபாண்டவருக்குத் தமிழ் நூற் பொதியில் ஐந்தாகச் சொல்லப்பட்டவை யெவையெவை யுண்டோ அவைகளெல்லாம் உவமானமாகக் கூறப்பட்டன. எண்ணில் இது உவமமே யொழிய ஏற்றத்தில் உவமம் ஒன்றும் வெளிப்படவில்லை. சற்றே வலிந்து கூறின் பொருத்தமமையலாம். நிலம், நீர் தீ வளி வானம் என்னும் ஐம்பெரும் பூதங்களும் இன்றி உலகம் நடவாது; அவ்வாறே, பாண்டவர் ஐவரின்றி அக்காலத்திய உலகும் தருமமும் நடவா. இவை ஐந்தினுள்ளு முறைகின்ற வலிமை பெரிது; அவரைந்துபேர்களின் ஆற்றலும் மிகப்பெரிது. நிலம் போற் பொறையுடையர் தருமரென்றும், வளியின் புதல்வன் வீமனென்றும் கொள்வோமானால் மற்றவை பொருந்தா. ஐம்புலன்கள் அகராதியில் 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன'வென்று கூறப்பட்டிருக்கின்றன. இப்புலன்கள் ஒவ்வொன்றையும் குந்தி மைந்தர் ஒவ்வொருவருக்கும் ஒப்பிடுதல் இயலாது. பஞ்சேந்திரியங்களின் பயனாகிய இவை பஞ்சேந்திரியங்களைப் பெற்ற உயிருக்கு இன்றியமையாதிருத்தல் போல், அந்நாட்டின் குடிகளுக்கு இவர் இன்றியமையாதவர். 'நயனங்கள் முதலான வைம் புலனு மனமும்போ னகரி யெய்தி" என்றார் இராசசூயச் சருக்கத்திலும். ஐந்து காவென்பன ஐந்தருவருக்கம். அவை சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாத மென்பனவாம். அந்நிழலடைந்தோர்தம் எண்ணங்கள் முற்றுப்பெறுமாறுபோல், பாண்டவர்களை அணுகினோரும் சிந்தை குடிகொண்டது சித்திக்கப் பெறுவர். பணிமுடி ஐந்து: பாண்டவர் நாகத்தின் ஐந்து தலைகளையும் ஒத்தனரென்பது பொருந்தாது. முன்னம் துரியோதனுதியருக்கும் இவ்வுவமத்தை உபயோகித்ததை இப்புலவர் மறந்தனர் போலும். திரௌபதி மாலையிட்ட சருக்கத்தில்,

மணியின் கிரண வெயிலெறிப்ப
மண்ணேழ் தாங்கு நச்செயிற்றுப்
பணியின் முடிநா யகத்தலையின்
பாங்கே நிறைந்த பஃறலைபோற்
றுணியுங் கொடுமை வகிரன்ன
துணைவர் துச்சா தனன்முதலோ
ரணியுங் கழற்காற் சுயோதனனுக்
கருகா சனத்த ரிவரென்றார்.

நச்செயிற்று நாயகனான துரியோதனன் பக்கல் கொடுமையின் பிளவுபோல் நின்ற துச்சாதனன் முதலானோரைத் தாதியர் திரௌபதிக்குக் காட்டினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (திரௌபதி மாலையிட்ட சருக்கத்தைப் பார்க்கவும்) இங்குப் பாண்டவரையும் நாகத்திற்கு ஒப்பிட்டார் வில்லி. செய்யுளை நிறைக்க ஐந்தாகிய பொருள்களை யெல்லாம் திரட்டிப் பொருத்தங்களை மறந்தார். ஐந்து உடல்களுக்கு முயிரொன்றாயினரென்று சொல்லத் தரமேயன்றி, ஐந்துயிர்களுக்கும் நாகத்தைப் போல் உடலொன்றாயின

ரென்று சொல்வதற்கில்லை. நாகம் அறிவிற் சிறந்த தென்பர் சிலர். இதற்குச் சான்று ஏதுமில்லை. இயற்கையாலும் ஐந்தலை நாகம் பாண்டவர்களுக்குப் பொருந்தாதென்பது திண்ணம்.

**ஐந்து வாளி:**—மன்மதன் கணைகளான தாமரை, மா, அசோகு முல்லை நீலோற்பலம் என்றுவது, ஐம்படைகளாகிய சங்கு சக்கரம் வில் வாள் தண்டு என்றுவது கொள்ளலாம். மாறன் கணைகளுக்குச் சொல்லப்படுகின்ற மயக்கம், சிந்தாகுலம் முதலிய செயல்களைப் பாண்டவர்களுக்கு ஏற்றிச்சொல்வதரிது. அவனது வாளிகள் தப்பாது பயனை உண்டுபண்ணுவதுபோலப் பாண்டவர்களும் நச்சினர்க்கு நன்மையை யுண்டாக்குவர். ஐம்படைகளாகிய வில், வாள், தண்டு முதலியவைகள் தம்மைத் தாங்கினருக்கு உதவுதல் போல், தம்மை யண்டினருக்குப் பாண்டவரும் உதவுவ ரென்க.

**வேள்வி ஐந்து:**—கடவுள் வேள்வி, பிரம வேள்வி, பூத வேள்வி, மானுட வேள்வி, தென்புலத்தார் வேள்வி என்பனவாம். தேவருக்கும், மானுடர்க்கும் மற்றையோருக்கும் சாந்திசெய்தலால் எவர்க்கும் சாந்திசெய்பவர் பாண்டவர் என்பது பெறப்படும்.

**வாசம் ஐந்து:**—இலவங்கம், ஏலக்காய், கற்பூரம், சாதிக்காய், வால்மிளகென்பன. இவற்றைஅனைவரும் விரும்பலாலும் அவை பலர்க்கும் இன்பம் பயத்தலாலும் பாண்டவர்கள் எவர்க்கும் உரியர் என்பது தோன்றும்.

இவ்வாறு ஐவரும் ஐந்து தேர்களின்மீ தேறினர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் வெண்கொற்றக் குடை ஏற்பட்டது. அவை, அத்திரி முனிவர் கண்ணினும், திருமாலின் உள்ளத்திலும், அக்கினியின் முகத்தினும், திருப்பாற் கடலினும், பிரம்ம சிருட்டியினும் தோன்றிய ஐவகை நிலவை யொத்திருந்தன.

விழியி னெஞ்சின் வாரெருப்பி
வீடுததியின் விதிபடைப் பினிற்றோன்றிப்
பொழியும் வெண்கதி ரைவகை
மதியுமப் பொழுதுதித் தனவென்ன
மொழியு மைந்து பொற்றனிக்
குடைநிழற்றின முழுமதி வடிவின்க
ணிழியும் வெண்சுடர்க் கற்றையிற்
சாமா மிரட்டின விருபாலும்

அந்நிலவினின் றிழியும் கதிர்களை யொத்தன சாமரம். நமது கண்களுக்குப் புலனாகும் சந்திரனொழிய வேறு சந்திரர்களும், அண்டத்திலமைந்திருக்கின்றனவென்பது ஆங்கில வானநூலோர் துணிபு. ஒருலகினிற்கு நான்கு நிலாக்கள் ஒரே காலத்துக் காய்கின்றனவென்கிறார்கள். இவ்வுண்மையை நம்முன்னோர் அறிந்திருந்தனர் போலும்.

---

# கதிரைமலைக் காதல்

[116-வது பக்கத் தொடர்ச்சி]

தீய நரகமதிற் சென்மித்த விவ்வுடம்பாங்
காயமது மாயமெனக் கண்டு பிடித்தேனே,
துஞ்சு முடலைச் சுடுவதையுங் கண்டுகொண்டு
அஞ்சி யழுதழுது மாசைவலைப் பட்டேனே,
ஆடுவதும் வீணு யலையுமுடல் மண்ணாிக்கப்
போடுவதுங் கண்டுகொண்டும் புத்திகெட்டுப்போனேனே,
வாசக் கதிரைமலை வள்ளலைநான் போற்றுமல்
காயக் கபடர்சொன்ன கட்டளையில் நின்றுவிட்டேன்;
கட்டிப் பிடித்திறுக்கிக் காவலிட்டு வாதபித்தம்
ஒட்டியெனைக்கெடுக்க வொழிந்துவீறு கெட்டேனே.
சுற்றத்தார் பார்த்திருக்கத் தோன்றுமல் மெள்ளவுயிர்
அற்றத்தைக் கண்டுமின்னும் ஆசைவலைப் பட்டுவிட்டேன்.
காட்டில்நா யோரி கழுதுபல வும்விரும்பும்
ஓட்டை மலக்கூட்டை யுதவுமென்று நம்பிவிட்டேன்.
சலமும் பலநரம்புந் தயங்குமுதிரச் சடத்தை
உலையாம லென்று முதவுமென்று நம்பிவிட்டேன்.
காலனொருகையிற் கடும்பாசந் தான்தூக்கிச்
சூலத்தாற் குத்துந் தூலத்தை யோம்பிவிட்டேன்.
நாயுடனே யோரி நச்சரவுந் தான்விரும்பும்
பேய்விரும்பு மிவ்வுடம்பைப் பேணி வளர்த்தேனே.
ஓங்கும் பகடேறி யுறுமறலி தண்டனிட
நீக்கவழி காணுமல் நின்றுதடு மாறுவனே.
கந்தமலைத் தென்கதிரைக் கந்தனைநான் போற்றுமல்
புந்திமிக நொந்தலைந்து போனேனிக் காலமெல்லாம்.
மெய்யாகத் தென்கதிரை வேலவனைப் போற்றுமல்
ஐயோநான் வீணுக வலைந்தேனிக் காலமெல்லாம்.
கோலமெலாங் கெட்டுக் குலைந்துதடு மாறிநொந்து
காலமெலாம் நொந்து கலங்கிமனஞ் சலித்தேன்,
ஆஞ்ந் கதிரைமலை யற்புதத்தைப் போற்றுமல்
நாளெல்லாம் வீணுய் நலமற் றிருந்துவிட்டேன்.
பாதகன் நானுனேன் படுபாவி நானுனேன்
ஆதுலன் நானுனே னறுமுகனைப் போற்றுமல்;
ஓடினே னேடி யுலைந்தே னுலகமெல்லாம்
வாடினேன் தென்கதிரை வள்ளலைநான் போற்றுமல்;
அலைந்தே னுலகமெல்லா மங்குமற்றே னிங்குமற்றேன்
உலைந்தேன் கதிரைமலை யுத்தமனைப் போற்றுமல்;
எதிராக மூவுலகி லிம்மை மறுமைக்குமிடம்
கதிர்காமம் என்றுதிடங் கொண்டுமனங் கண்டேனே.
மதுரக் கவிக்கிதமாய் வந்துகதி சேருமிடம்
கதிரைக் கிரியெனவுங் கண்டுபிடித் தேனே.
ஆரணங்கள் போற்றுமலை யன்பரையீ டேற்றுமலை
காரணங்கள் காட்டுங் கதிர்காம மாமலையே.
முத்தி கொடுக்குமலை மூவுலகோர் போற்றுமலை
சித்தி கொடுக்குமலை தென்கதிரை மாமலையே.
இந்தவுலகி லுள்ள வேழைகளை யீடேற்றக்
கந்தவேள் வாழுங் கதிர்காம மாமலையே.
வேகச் சனியனுக்கு வேண்டியதோர் வாகனமாம்
காகத் தொனிகேளாக் கதிர்காமச் சந்நிதியே.
அவலப் புலனடைக்கு மன்பர்களை யீடேற்றும்
கவலைப் பிணியடக்குங் கதிர்காமச் சந்நிதியே.
முத்திதருந் தென்கதிரை முருகனைநான் போற்றிசெய்து
சித்தமுருகி மனந்தேற வறிந்தே னிலையே.
வானந்து தென்கதிரை வள்ளலைநான் போற்றிசெய்து
ஆனந்தத் தேனைநா னள்ளியுட்கொண் டேனிலையே.
ஆறெழுத்தை நேசித் தகந்திருத்திப் பூசைசெய்து
கூறரிய வான்பாலைக் குடிக்கவறிந் தேனிலையே.
மருவித் துதித்தமரர் வாழ்த்துகதி ராபுரியைத்
தெரிசித்துத் தெண்டனிடும் சென்மமெடுத் தேனிலையே.



ாணிக்கக் கங்கைதனில் மருவிநீ ராடியுள்ளம்,
ாணிக்கை யிட்டிறைஞ்சக் காயமெடுத் தேனிலையே.
தெண்டனிட்டுப் பன்னிருகைச் செவ்வேள் திருப்பதத்
ண்டு தெரிசித்திடநான் காயமெடுத் தேனிலையே. [தைக்
ாழுங் கதிரைமலை வள்ளலைநான் போற்றுமல்
ளும் பவக்கடலை நீந்தவறிந் தேனிலையே.
க்கபுகழ்த் தென்கதிரைச் சண்முகனைப் போற்றிசெய்து
க்கவினைக் கட்டறுக்க வினவியறிந் தேனிலையே.
சொல்லற் றிரவுபகல் தூயோனைப் போற்றிசெய்து
செல்வத்தி ஞனிருக்கச் சென்மமெடுத் தேனிலையே.
அன்னம் இரப்போருக் கருள்கதிர் காமத்தரசின்
சந்நிதியைத் தெண்டனிடத் தபசுபண்ணி னேனிலையே.
ண்டன் விடுங்காலன் தண்டமுடன் வந்தணுகி
அண்டி யுயிர் கவரும்போ தரற்றுந் துணை காணேனே.
வெட்டுங்கடாவேறி வெங்கூற்றன் வந்தணுகிக்
கட்டும்போ தென்னுயிரைக் காக்குமிடங் காணேனே.
காலனைக் கண்டஞ்சிக் கலங்கிவிழு மன்னேரம்
வேலும் மயிலுமல்லாமல் வேறுதுணை காணேனே.
நாடினே னுன்னருளை நம்பினே னுன்பதத்தைத்
தேடினே னுன்பதியைத் தென்கதிரை வேலவனே.
காக்கக் கடனுனக்குக் காத்திரகுிந் தென்குறையைத்
தீர்க்கப் பரமுனக்குத் தென்கதிரை வேலவனே.
விண்ணுலகிற் றேவர்கட்கும் மேதினியி லுள்ளவர்க்கும்
கண்கண்ட தெய்வம் கதிர்காம வேலோனே.
பொய்யான கள்ளம் பொருந்து கலியுகத்தில்
மெய்யான தெய்வம் விளங்குகதிர் வேலோனே.
தன்னை மறந்தாலுந் தலத்தை மறந்தாலுமினி
உன்னை மறவாம லிருக்கும் வேலாயுதமே.
கோலப் பதினொன்று கொண்டருத் திரர்கள்
கோலம்பெற வடிவாய்க் கூட்டியவே லாயுதமே.
பாரத் தலங்கள் பருவரைகள் தூள்படுத்திச்
சூர சங்காரம் தொலைக்கும்வே லாயுதமே.
அரனு நீ திருமாலும் அயனும்வச் ராயுதனும்
........................மாற்றிய வேலாயுதமே.
........................வச்சிராயுதமும்
அரியுடைய சக்கரமு..............வேலாயுதமே.
தீயகொடும் பாவியாம்யான் செப்பியவிண் ணப்பமதைத்
தூயவடி வேலவர்முன் சொல்லுமயில் வாகனமே.
துணிந்து மதியாமல் சொல்லாதே வேலவரைப்
பணிந்து தொழுதுசொல்லும் பச்சைமயில் வாகனமே
அழுதழுது நான்வருந்து மல்லலெல்லாம் வேலவரைத்
தொழுதுநின்று மெள்ளமெள்ளச் சொல்லுமயில் வாக
காதலித்துப் பூவுலகிற் கன்மவினைக் கூடெடுத்துப்[னமே.
பேதலித்தேன் என்றுசொல்லிப் பேசுமயில் வாகனமே.
தூருத்தி யெடுத்தலைந்த துன்பமெல்லாம் வேலவர்க்குப்
பெருத்தசுமைப் பாரமென்று பேசுமயில் வாகனமே.
என்றும் படுந்துயரால் எய்துமெலி வுற்றடியேன்
துன்பம் படுந்துயரைச் சொல்லுமயில் வாகனமே.
கணியாப் பிறவிக் கடலிலே விழுந்தடியேன்
பிணியால் வருந்துவதும் பேசுமயில் வாகனமே.
இறக்க வழியிருந்தா லின்னுமின்னு மிவ்வுலகில்
பிறக்கமுடியா தெனவும் பேசுமயில் வாகனமே.
வழிவழித் தொண்டாக வந்தடிமை கொள்ளுமென்று
அழுதழுது சொன்னேனென் றறையுமயில் வாகனமே.
நாட்டமதாய் வேலவர்தம் நற்சரண மென்சிரத்திற்
சூட்டிவிடச் சொன்னதென்று சொல்லுமயில் வாகனமே.
கார்வென்று சொல்லும் கடைபோகக் காத்தென்னைப்
பாரென்று சொல்லும் பச்சைமயில் வாகனமே.
வழித்துஅயன் என்சிரத்தில் வீண்கீற்றுக் கீறியதை
அழித்தெழுதச் சொல்லி யருளுமயில் வாகனமே.
இன்றுடிப் பாடினேன் தொழுது வேலவர்முன்
மன்றுடிச் சொல்லிவிடும் அன்னமயில் வாகனமே.
பாரமிந்தத் துன்பம் படமுடியா தென்றுசொல்லிச்
சூரைவென்ற வேலருடன் சொல்லுமயில் வாகனமே.
அல்லற் படுந்துயரா லானமனத் துன்பமெலாம்
சொல்லில்முடி யா தெனவுஞ் சொல்லுமயில் வாகனமே.
காத்தருள வேணும் கருணைவைத் தென்துன்பமெலாம்
தீர்த்தருள வேணுமென்று செப்புமயில் வாகனமே.
மறைதுதிக்குந் தென்கதிரை வள்ளிமண வாளன்
குறைதவிர்க்க வின்னுமின்னுங் கூறுமயில் வாகனமே,
வேந்த ரிடுக்கண் வெருபயமா யேங்கிமனம்
சோர்ந்துமிக வாடுவதுஞ் சொல்லுமயில் வாகனமே.
தொண்டுபட்டே னறுமுகத் தூயோன் திருப்பதத்தைத்
தெண்டனிட் டேனென்று செப்புமயில் வாகனமே.
இரக்கந் தருங்கருணை யெங்கோனைப் போற்றிசெய்து
பெருக்கப் பிறவிப் பெருங்கடலைத் தாண்டினனே.
கந்தக் கதிரமலை நாதனைநான் போற்றிசெய்து
............மியமன்வலையைத் தட்டி விலக்குவனே.
சித்திக்கு மெய்ஞ்ஞானத் தேவனைநான் போற்றிசெய்து
முத்திக் கரையேற முன்னின்று கொண்டேனே [லீ
கைகுவித்துப் பன்னிருகைக் கந்தர்திருக் காதல்சொல்
ஐவரையுங் கட்டி அறிவுத்தாள் பூட்டிக்கொண்டேன்.
கட்டிய முன்னைவினைக் கருஞ்சூரைப் பற்றையெலாம்,
வெட்டி வெளியாக்கி மெய்ஞ்ஞான வெளிகண்டேன்.
இன்பமுடன் தென்கதிரை யெங்கோனைப் போற்றிசெய்த
துன்பமெலாந் தீர்த்துச் சுகம்பெற்றுக் கொண்டேனே.
கொம்மை முலைவள்ளி கொழுநனையான் போற்றிசெய்து
இம்மை மறுமைக்குமினி யீடேற்றங் கண்டேனே.
குன்றெறிந்த வேலருயர் கோலமலர்ச் சேவடிகள்:
என்றும் மறவா திருக்கவரந் தந்தாரே.
மிடிமைத் துயரால்மெலிந் தடியேன் வாடாமல்
அடிமைத் திறமாக வாண்டடிமை கொள்ளுமையா,
கதிரையப்பன் காதலிதைக் கருத்தாக வோதினபேர்
பதியிருந்து வாழ்ந்துநல்ல பாக்கியங்கள் பெற்றிருப்பார்
கந்தமுரு கன்பேரில் காதல்தனை யோதினபேர்
நந்தா வனம்போல நன்மைபெற்று வாழ்ந்திடுவர்,
சித்திரவே லப்பருயர் திருக்காத லோதினபேர்
முத்திபெற வாழ்ந்துநல்ல மோக்ஷங்கள் பெற்றிருப்பார்
சீரான தென்கதிரைச் செல்வர்திருக் காதைதன்னைப்
பாராட்டு மன்பர் பராபரங்க ளாகுவரே.

வாழி கதிரையப்பன் வாழிகுற வள்ளியுடன்
வாழிதெய்வ யானையரும் வாழியென்றும் வாழியரே
கோழிக் கொடிவாழி குலவுமஞ்ஞை தான்வாழி
ஆழி யுலகத்தோ ரனைவோரும் வாழியரே.

சீர்வாழி முகில்வாழி சிவசமயம் வாழிநற்
செங்கோல் தழைத்து வாழி
செந்தா மரைபொருட் டுறைமாது
மவடிருக் கேள்வனும் வாழி வாழி
கார்வாழி குக்குட மயிலுமே வாழியிக்
காசினியிற் கற்றோரும் வாழி
கல்வியுஞ் செல்வமும் கருதுவோர் மனமுமே
கருணைகுடி கொண்டு வாழி
ஊர்வாழி யுதயனொடு திங்களக் கினியென்னு
மொருமூன்று சுடரும் வாழி
ஓதுமம் புயக்கடவுள் தேவிசொல் லாகியே
ஒருநா விருந்து வாழி
ஏர்வாழி எங்கள் சுற்றமும்வாழி யினிதாக
எனையீன்ற தாய்தந்தை வாழி
ஏகம்ப மூர்த்திதன் திருப்பாத
சரணமே எப்பொழுதும் வாழி வாழி.

[மற்றிற்று.]

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

4-ம் பத்து 6-ம் தசகம்.

[109-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பாசுரம்.

தீர்ப்பாரை யாமினி யெங்ஙனம்
நாடுது மன்னைமீர்
ஓர்ப்பாலிவ் வொண்ணுத லுற்றநன்
னோயிது தேறினோம்
போர்ப்பாகு தான்செய்தன் றைவரை
வெல்வித்த மாயப்போர்த்
தேர்ப்பாக னார்க்கிவள் சிந்தை
துழாய்த்திசைக் கின்றதே.

அவதாரிகை:-இந்தப் பாசுரங்கள் அகப்பொருள் களவியலின் வெறிவிலக்குத் துறையை அனுசரித்துப் பாடப்பெற்றிருக்கின்றன. இவ்வாழ்வார் இயற்றிய திருவிருத்த பிரபந்தத்தைப் பற்றிய முகவுரையில், இறையனாரகப்பொருளிலும், பின்னர் வந்த கோவைகளிலும் அமைந்துள்ள பல திணை துறைகளில் சிற்சிலவற்றையே இவ்வாழ்வார் கையாண்டுள்ளாரென்று குறித்திருக்கின்றோம். வெறிவிலக்கெனப்படும்துறை பின்வருமாறு:-இயற்கைப் புணர்ச்சிநிகழ்ந்தபின் களவொழுக்கத்தில் இன்பம் நுகர்ந்திருந்த தலைமகன் பொருள் ஈட்டிவந்து மணம்புரிய எண்ணித் தூரதேசம் போய்க் குறிப்பிட்டகாலத்தில் வாரமையால் அந்நிலையில் பிரிவாற்றாமல் மிகவருந்திய தலைமகளைச் செவிலித்தாயார் எதிர்ப்பட்டு அவளது வடிவுவேறுபாட்டைக் குறித்து இதற்குக் காரணம் என்னை என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மரபுப்படி ஆராய்ந்து இவள்மீது முருகக்கடவுள் ஆவேசித்திருக்கின்றானென்று கூற, வெறியாட்டாளனை அழைப்பித்து ஆவேசமெடுக்க முயலவும், அப்பொழுது, தலைமகளது தோழியானவள் வந்து, “நான் நன்கு ஆராய்ந்து பார்த்தேன். தலைமகளுக்கு வந்த நோய் முருகக்கடவுளால் வந்ததன்று. (இவ்வாழ்வார் ஆகிய) தலைவிக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானோடு களவொழுக்க முண்டாகிக் கலவை இன்பத்தி லகப்பட்டு அது அகலவே இவள் பித்தேறி ஆசைப்பட்டு வருந்துகிறாள். இதற்கு எம்பெருமானது திருநாமங்களே முக்கியமான மந்திரம். அவனது திருத்துழாயே இதற்கு மருந்து. எம்பெருமான் உபாயாந்தரங்களாலே அடையத்தக்கவனல்லன். சில்லரைத் தேவதைகளை முன்னிட்டுப் பூஜையிடுவது நியாயமன்று; பயனுமில்லை. அவனினத்தார் அவனடியார் ஸ்பரிசம் செய்த பாததூளி முதலியவைகளே ஆழ்வாருக்குற்ற நன்னோய்க்குப் பரிஹாரம்” என்று திருவிருத்தம் 20-ம் பாசுரத்திலும் 53-ம் பாசுரத்திலும் இத்தசகத்திலும் கூறி, வெறியாட்டத்தையும், க்ஷுத்திர தெய்வத்துக்குப் பலிகள் முதலியவற்றையும் தோழி விலக்குகின்றாள். அகப்பொருள் இலக்கணமுறையில், இதற்குப் பின் நிகழ்வது தலைவனுடன் கூடி உடன் போக்கோ, வரைந்துகொள்ளத்தக்க முயற்சியோ, கடிமணமோ புலநெறி வழக்காகும். இவைகளைச் செப்பப்புகின் விரியும். இவ்வாழ்வார் விஷயத்தில் இவ்விரண்டு துறைகளும் இயலாதனவாகும். இது நிற்க.

விசேஷ அவதாரிகை :—சென்ற ஐந்தாம் தசகத்தில் எம்பெருமானை அநுபவியாநின்றனர் ஆழ்வார். பிறகு இத்தசகத்தில் ஓர் பிராட்டியின் நோயைத் தீர்ப்பார் யாவரென்று அறிந்து அவரைக்கொண்டு தீர்த்துஇவளை எவ்வாறு பெறக்கூடுமென்று அன்னைமார் துயரப்பட; தோழி, “இப்பிராட்டிக்கு வந்திருக்கும் நோயை நானறிவேன்; பரிஹாரமு மறிவேன்” என்று தோழியின் பாசுரத்தால் ஆழ்வார் தம் நோய் நிலையைத் தெரிவிப்பதற்கு என்ன காரணமெனில் - எம்பெருமான் இப் பெரியார்தம் சந்தோஷம் அடங்கினபின், இவரோடு கலப்பது உசிதமென்று சிறிது விலகியிருந்ததே காரணம். அன்னைமார் முன்னரே கட்டுவிச்சி சொன்ன குறியின் நிர்மானத்தை யநுசரித்துச் சில்லரைதேவதைகளுக்குப் பலியும் பூஜையும் செய்துவந்தால் ஆழ்வாருக்கு மனம் நோகுமென்று ஆழ்வாரது ஆப்தர்கள், தோழியின் பாசுரமாய் அவர்களை வெறி விலக்குகின்றார்கள். இதுவே இத்தசகத்தின் நோக்கு.

பதக் குறிப்புக்கள் :—சிந்தை - மனக்கிலேசம், துழாய் - துழாவி, திசைக்கின்றது - மோஹியாநின்றது, தீர்ப்பாரை-இப்பிராட்டியின் நோயைத் தீர்க்க வல்லவர்களை, எங்ஙனம் நாடுதும் - எங்கே தேடக்கடவோம். கட்டுவிச்சியும் வேலாட்டு நடத்துபவரும் வல்லவரல்லர் என்பது கருத்து.

பொழிப்புரை:—இப்பிராட்டியின் அன்னைமார்கள், இவ்வழகான முகத்தையுடைய பிராட்டியின் நோயைத் தீர்க்க எந்தத் தேவதையை ஆச்ரயித்தாகிலும் இவளைப்பெறுதல்இலாபமென்று கருதுங்காலத்தில் இப்பிராட்டியினுடைய தோழியானவள், இவளுக்கு இந்த நோய் எப்படி வந்ததென்று நிரூபித்து அந்த நிரூபணத்தாலே (ஓர்ப்பு)“இவளுற்ற மிகவுஞ் சிலாக்கியமான நோயை யறிந்தோம். எதனாலே வந்ததென்னில், துரியோதனாதிகள் நடுங்கும்படி அன்று சேனையை அணிவகுத்துப் பஞ்சபாண்டவரை வெல்வித்த மாயத் தேர்ப்பாகனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை ஆசைப்பட்டு அடையாமையாலே வந்தது.நாம் இந்தத் துயரத்தைத் தீர்க்குமாறு எப்படி யாரைக்கொண்டு செய்யப்போகின்றோம். நான் ஒருவகையாய்த் தீர்மானித்திருக்கின்றேன். கட்டுவிச்சியும் வேலாட்டமும் துணையாகா,” என்று அன்னைமார்களுக்குச் சொல்லி அவர்களுடன் மனங்கலந்து பரியாலோசிப்பது போல், அவர்கள் ஒருவாறு எத்தனித்த பூஜையையும் வெறியாட்டத்தையும் விலக்குங்கருத்துடன் தோழி மேல் கூறுகின்றாள்.

---

2-ம் பாசுரம்.

திசைக்கின்ற தேயிவ ளேநோயிது மிக்க பெருந்தெய்வ
மிசைப்பின்றி நீரணங் காடுமிளந் தெய்வ மன்றிது
திசைப்பின்றி யேசங்கு சக்கர மென்றிவள் கேட்கநீ
ரிசைக்கிற்றீ ராகி னன்றேயில் பெறுமிது காண்மினே.

பதக் குறிப்புக்கள்:-திசைக்கின்றது-அதுவோ எதுவோவென்று பிரமிக்கச் செய்கின்றது. (Confuses and Confounds you) இசைப்பின்றி - இவள் நோய்க்கும் அதற்குள்ள பரிஹாரத்துக்கும் உங்கள்



சுவரூபத்திற்கும் சேர்த்தி யாதொன்றும் இல்லாமலிருக்கின்றது. உங்கள் தெய்வ ஆவேச ஆட்டம் திசைப்பின்றியே - யாதொரு மனக்கலக்கமும் இன்றியே கேட்க இசைக்கிற்றீராகில் - இவள் காது கேட்கும்படி சொல்ல வல்லீர்களாகில்-நன்றே பெறும் - நோய் தீர்ந்து இவளைச் சொஸ்தசித்தமுள்ளவளாய் அடையலாம். காண்மினே-உடனே பயனைப் பெறுவதைக் கண்ணாலே பார்க்கலாம். வெகு சீக்கிரத்தில் என்று தாத்பரியம்.

பொழிப்புரை:—நீங்கள் இவளது நோய் இன்னது என்று அறிகிலீர். இது மிக்க பெருந் தெய்வத்தால் வந்தது. அதற்கு யாதொரு பொருத்தமு மில்லாமல் நீங்கள் நின்று, அணங்காடுகிற சிறுதேவதையால்வந்ததன்று இது. இதற்குப் பரிஹாரந்தான் யாதென்னில் பிறர் சொல்லும் வார்த்தைகளால் மனக்கலக்கமில்லாமல், “சங்கு” “சக்கரம்”என்று இவள் கேட்பதற்கிணங்க நீவிர் அவள் காதுகளில் அந்தச் சொற்களைச் சொல்வீர்களாகில் இவளை நோயினின்றும் மீட்டுச் சொஸ்தமான சித்தவிருத்தியுடன் பெறலாம். யான் சொல்லும் பரிஹாரத்தின் குணத்தை உடனே நீங்கள் காண்பீர்.

---

3-ம் பாசுரம்.

இதுகாண்மி னன்னைமீ ரிக்கட்டு
விச்சிசொற் கொண்டுநீர்
எதுவானுஞ் செய்தங்கோர் கள்ளு
மிறைச்சியும் தூவேன்மின்
மதுவார் துழாய்முடி மாய
பிரான்கழல் வாழ்த்தினு
லதுவே யிவளுற்ற நோய்க்கு
மருமருந் தாருமே.

உரை:—“இக்கட்டுவிச்சியின் சொல்லைக் கேட்டு யெதுவானுமொன்றைச் செய்து அங்கு ஓர் கள்ளும் இறைச்சியும் தூவாதீர்கள். மற்று, செய்வதென்னில் மதுவார் துழாய்முடி மாயப்பிரான் கழல்வாழ்த்துங்கோள். அப்படிச் செய்யில் அதுவே இவளுற்ற நோய்க்கு அருமருந்துமாம் - யுக்தமுமதுவே, இது நிச்சயமென்கிறேன்”—ஆறுயிரப்படி.

---

4-ம் பாசுரம்.

மருந்தாகு மென்றங்கோர் மாய
வலைவைசொற் கொண்டுநீர்
கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறுங்
களனிழைத் தென்பயன்
ஒருங்காக வேயுல கேழும்
விழுங்கி யுமிழ்ந்திட்ட
பெருந்தேவன் பேர்சொல்லு கிற்கி
லிவளைப் பெறுதிரே.

பதக் குறிப்புக்கள்:—அலவை-அல்பமான மனுஷர்கள். களன்-தெய்வங்கள் முன் முற்றத்தில் பலி இடும் இடம். இழைத்து-விதிப்படி பலி பீடத்தில் இட்டு. சொல்லுகிற்கில் - சொல்ல வல்லீர்களாகில்.

உரை :—“மருந்தாகுமென்று வஞ்சனையாய்த் தனக்குத் தோன்றிய தொன்றைச் சொல்லும் கட்டுவிச்சி சொற்கொண்டு கருஞ்சோறும் செஞ்சோறும் களத்தில் வாரியிட்டு என்ன பிரயோஜனமுண்டு. ஒருங்காகவே உலகங்களேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட பெருந்தேவனுடைய திருநாமத்தைச் சொல்லின் இவளைப் பெறலாம் என்கிறாள்”—ஆறுயிரப்படி

---

# தமிழ்ப் பாடம் 57.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[105-வது பக்கத் தொடர்ச்சி]

முன்னே உரைத்தவாறு நளன் அயோத்திமா நகரஞ் சேர்ந்து அங்கு இருதுபர்னவேந்தனிடம், வாகுகன் என்ற பேரோடும், தேர்த்தொழிலும் மடைத்தொழிலும் செய்பவனாய் அமர்ந்து இருக்க, இங்கு விதர்ப்பநாட்டிலிருந்த தமயந்தி அவனடைந்ததேயத்தைத் தேடி அறிவதற்கு ஓர் உபாயஞ்செய்து தனது அரண்மனைப் புரோகிதனை அனுப்பியதை இனிவரும் செய்யுள்களில் காணலாம்.

குறித்துரைத்த வாறக் குலவேந்த னேன்று
மறித்துரையா னாங்கவனும் வைக—வெறித்தவிள
மான்போல் விழியாள் மகிழ்நனிலை யேதெனவே
ஊன்போ லுயங்குவா ளோர்ந்து. 28.

பதப்பிரிவு:-குறித்து உரைத்த ஆறு அ குலம் வேந்தன் ஏன்று மறித்து உரையான் ஆங்கு அவனும் வைக வெறித்த இள மா[ன்]போல் விழியாள் மகிழ்நன் நிலை ஏது எனவே ஊன்போல் உயங்குவாள் ஓர்ந்து.

பதவுரை.

குறித்து - (மடைத் தொழிலும் தேர்த்தொழிலும் வல்லன் யான் என்று நளன்) குறித்து
உரைத்தவாறு - உரைத்தபடி,
அ - அந்த
குலம் - சிறந்த
வேந்தன் - இருதுபர்ன அரசனும்
மறித்து - தடுத்து
உரையான் - சொல்லாமல்,
ஏன்று - நளனை ஏற்றுக்கொள்ளவே
ஆங்கு - அவ்விடத்தில்
அவனும் - நளனும்
வைக - வசித்திருக்க,
வெறித்த - மருண்ட
மான்போல் - மானைப்போல்
விழியாள் - பார்வையையுடைய தமயந்தி
மகிழ்நன் - தன் நாயகனுடைய
நிலை - நிலைமை
ஏது - என்னவோ
எனவே - என்றே
ஓர்ந்து-எப்பொழுதும் எண்ணி எண்ணி [ரும்)
ஊன்போல்-(தன்னுடைய) உடலைப்போல் (உயி
உயங்குவாள் - வாடுபவள் ஆயினாள்.

---

என்னை யிருங்கானி னீத்த விகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னைப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானு ளுணர்ந்து. 29.

**பதப்பிரிவு:**—என்னை இரும் கானில் நீத்த இகல் வேந்தன்தன்னை நாடுக என தண் கோதை மின்னை புரை கதிர் வேல் வேந்தன் புரோகிதனுக்கு இந்த உரை பகர்வது ஆனுள் உணர்ந்து.

**அன்வயம்:**- தண் கோதை,"என்னை இரும்கானில் நீத்த இகல்வேந்தன் தன்னை நீ நாடுக" என, மின்னைப் புரை கதிர்வேல் வேந்தன் புரோகிதனுக்கு, இந்த உரை உணர்ந்து பகர்வது ஆனுள்.

**பதவுரை.**

தண் - குளிர்ச்சிபொருந்திய
கோதை - பூமாலையை அணிந்த தமயந்தி,
"என்னை - என்னை
இரும் - பெரிய
கானில் - காட்டில்
நீத்த - கைவிட்ட
இகல் - பராக்கிரமமுடைய
வேந்தன்தன்னை - நளவேந்தனை
நீ - நீ
நாடுக - தேடக்கடவாய்"
என - என்று
மின்னை - மின்னலை
புரை - ஒத்த
கதிர் - பிரகாசத்தை வீசும்
வேல் - வேலை ஏந்திய
வேந்தன் - விதர்ப்பராஜனுடைய
புரோகிதனுக்கு - புரோகிதனுக்கு
இந்த - இந்த (கீழ்க்காணும்)
உரை - வார்த்தையை
உணர்ந்து - தேர்ந்து
பகர்வது ஆனுள் - சொல்லலாயினுள்.

**குறிப்பு:**- இகல் வேந்தன்; கதிர்வேல்; வேல் வேந்தன், என்பன இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள். இகலை உடைய வேந்தன், கதிரை வீசும்வேல், வேலை ஏந்திய வேந்தன், என அவை விரியும்.

---

காரிருளிற் பாழ்மண்ட பத்தேதங் காதலியைச்
சோர்துயிலி னீத்த றுணிவன்றோ—தேர்வேந்தர்க்
கென்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந் தந்தா
சென்றறிந்து வாவென்று டேர்ந்து. [ரைச் 30.

**பதப்பிரிவு:**-கார் இருளில் பாழ் மண்டபத்தே தம் காதலியை சோர் துயிலில் நீத்தல் துணிவு அன்றோ தேர் வேந்தர்க்கு என்று அறைந்தால் நேர் நின்று எதிர் மாற்றம் தந்தாரை சென்று அறிந்து வா என்றுள் தேர்ந்து.

**பதவுரை.**

"சென்று - (நீ தேசம் தேசமாக) போய்,
'கார் - கரிய
இருளில் - இருட்டில்
பாழ் - பாழடைந்த
மண்டபத்தே - மண்டபத்தில்
தம் - தம்முடைய
காதலியை - நாயகியை
சோர் - அயர்ந்த
துயிலில் - நித்திரைக்கிடையே
நீத்தல் - கைவிட்டுப்போதல்
தேர் - தேரையுடைய
வேந்தர்க்கு - அரசர்களுக்கு
துணிவு - மிகவும் துணிச்சலான காரியம்
அன்றோ - அல்லவா!'
என்று - என்று
அறைந்தால் - சொல்லிக்கொண்டு நடந்தால்
நேர் - உனக்கு முன்னுக
நின்று - வந்துநின்று
எதிர்மாற்றம் - மறுமொழி
தந்தாரை-யாராவது சொல்லநேர்ந்தால் அவரை
அறிந்து - தெரிந்து
வா - வா"
என்றுள் தேர்ந்து - என்று யோசித்துத் தமயந்தி புரோகிதனுக்குச் சொன்னுள்;

**விரிவுரை:**—நளனுடைய காதில் இவ்வார்த்தைகள் பட்டால் அவன் எப்படியும் எதிர்வந்து பதில் சொல்லுவான் என்ற நிச்சயத்தைக்கொண்டு தமயந்திசெய்த உபாயம் இது. நளனைச் சிறிதும் நிந்தனை சாராமல் தமயந்தி தேர்ந்து சொல்லிய இச்சொற்கள் அவளது குணத்தின் பெருந்தன்மையை மிகவும் நயமாகக் காட்டுகின்றன. "காதலியை நீத்தல் துணிவு அன்றோ" என்று கூறுவதால், "காதலியைக் கைவிட்டுப்போவதற்கு அவர் மனம் என்ன பாடுபட்டதோ" என்று அவன்பால் தனக்கிருக்கும் பரிவையேகாட்டுகின்றுள். முன்னே, தன் ஆருயிரும் ஆசையும்போல் தோன்றிய அவன் அடிச்சுவடுகளைக் கண்டபோது தமயந்தி தன்னைவிட்டுப் போவதற்கு அவன் உற்ற துயரோடு ஊசலாடிய உள்ளத்தை ஊகித்தே சோர்வடைந்தாள். துகிலைக் கவர்ந்துசென்று அந்தரத்தே பொற்புள்ளாய் நின்று, "நன்னுடு தோற்பித்தோன் நானே காண்" எனப் பரிகசித்த கலியைச் சபிக்க வாயெடுத்த இவள், 'புகுநரகம் சேர்வாய்கொல்' என வன்மையை விட்டுக் கூறியதுபோலவே, நளனை இடித்துரைக்குஞ் சொற்கள் சொல்லியனுப்ப வேண்டியவள் வாயில் அவை அவனுக்குப் பரிந்திரங்கும் மொழிகளாகவே இருக்கும்.

---

## இலக்கணம்.

எழுத்துக்களின் மாத்திரையை முன்னுள் கூறினேம். நெட்டெழுத்துக்களுக்கு உரிய மாத்திரை இரண்டாயிருந்தாலும் அவை சிற்சில சமயங்களில் அளவெழுந்து மூன்று மாத்திரையளவு உச்சரிக்கப் பெறும். நன்கு மாத்திரையும் பெற்றுலும்பெறலாம். மெய்யெழுத்துக்களில் சில தமக்குரிய அரை மாத்திரைக்கு அதிகப்பட்டு ஒரு மாத்திரையளவு உச்சரிக்கப்பெறும். இவ்வாறு உயிரெழுத்து மாத்திரை மிகுந்து ஒலிப்பதற்கு உயிரளபெடை என்றும்,மெய்யெழுத்து மிகுந்து ஒலிப்பதற்கு ஒற்றளபெடை என்றும் பெயர். இவைகளை முன்னுள் பாடத்தில் காணலாம்.

இனி, சில எழுத்துக்கள் சிற்சில சமயங்களில் தமக்கு உரிய மாத்திரையைவிடக் குறைந்து ஒலிக்கவும்



கூடும். அப்பொழுது அவைகளுக்குக் **குறுக்கம்** என்று பெயர்.

அவ்வாறு குறுகக்கூடிய எழுத்துக்கள் ஆறு:—

இ உ ஐ ஔ, என்ற நான்கு உயிரெழுத்துக்களும், ம் என்ற மெய்யெழுத்தும், ஃ என்ற ஆய்த வெழுத்தும்.

ஐ, ஔ, என்ற இரண்டு எழுத்துக்களும் உயிர்நெடில்களாதலால் அவை ஒவ்வொன்றிற்கும் உரிய மாத்திரை இரண்டு. ஆனுல் நாம் பேசும்போது இந்த இரண்டு மாத்திரையளவு இவைகளுக்குக் கொடுத்துப் பேசுவதில்லை. இது என்ன எழுத்து என்று கேட்டால், இது ஐ, இது ஔ, என்று அந்த எழுத்துக்களின் பேரைச் சொல்லிக் காட்டுகின்றபோதுதான் அந்த இரண்டு எழுத்துக்களுக்கும் சுயமாகவுள்ள இரண்டு மாத்திரையையுங்கொடுத்து உச்சரிப்போம்.அப்படிக்கல்லாமல், இந்த இரண்டெழுத்துக்களும் வார்த்தைகளில் சேர்ந்து உச்சரிக்கப்படுகின்ற அளவைக் கவனித்துப்பாருங்கள். தையல், வைரம், ஐவனம், மைனு, என்று ஐ, என்னும் எழுத்து முதலில் வருகின்ற சில வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்துக்கொண்டு கவனத்தோடு உச்சரித்துப் பார்த்தால் நெடிலைப்போல் இரண்டு மாத்திரை யில்லாமல் குறைந்து ஒலிப்பதை நம் காது உணரும். **வை** என்பது **வா**, என்பதைப்போல் ஒரு நெடில். ஆனபோதிலும் வாரம் என்பதைவிட வைரம் என்பது குறைந்தொலிக்கவில்லையா! அப்படியே தீயல், என்பதைவிடத் தையல் என்பது குறைந்தொலிக்கும். மைனு, என்பதில் மை என்பது நெடில்தான், னு என்பதும் நெடில்தான். ஆனுல் அந்த **மைனு** என்னும் வார்த்தையைச் சொல்லும்போதே, முதலில் இருக்கிற ஐ, என்னும் ஒலியைவிடப் பின்வரும் ஆ என்னும் ஒலி அதிகமாய் உச்சரிக்கப்படுகின்றதல்லவா. ஏனெனில், தமிழ்மொழிகளைப் பேசும் முறையில் ஐ என்னும் நெடிலானது எவ்விடத்திலும் குறுகித்தான் ஒலிக்கும். வாரம் வைரம் வரம், என்ற மூன்று வார்த்தைகளையுஞ் சொல்லிப்பார்த்தால் வை என்ற எழுத்து, வா என்ற நெடிலைப்பார்க்கிலும் சிறிது குறைந்தும், வ, என்ற குறிலைப்பார்க்கிலும் சிறிது அதிகமாகவும் ஒலிப்பது தெரியவரும். ஏனெனில், இதன் மாத்திரை இங்கு நெடிலைப்போல் இரண்டுமில்லை; குறிலைப்போல் ஒன்றும் அன்று. இரண்டிற்கும் நடுவாக அது ஒன்றரை மாத்திரை அடைந்திருக்கின்றது.

வைரம் தையல் ஐவனம் மைனு, என்று முன் எடுத்துக்கொண்ட சொற்களெல்லாம் ஐ என்னும் எழுத்து, சொல்லிற்கு முதலில் வரும் சொற்கள். அங்கே ஐ இரண்டு மாத்திரையினின்று குறைந்து ஒன்றரை மாத்திரை பெற்றது. இனி, சொற்களுக்கு நடுவிலேனும் கடையிலேனும் வரும்போது ஐ ஒன்றரை மாத்திரைகூடப் பெறுமல் குறிலைப்போல் ஒரு மாத்திரையே பெற்று ஒலிக்கும். மறையோன் என்ற சொல்லையும் மறவோன், என்ற சொல்லையும் உச்சரித்துப் பாருங்கள். றைக்கும் றக்கும், ஒலி அளவில் ஒன்றும் ஏற்றங்குறைவு தோன்றுது. அப்படியே, முதலை, முதலி என்ற இரண்டு சொற்களையும் உச்சரித்துப் பார்த்தால், லி என்னும் குறில் எவ்வளவு நேரம் உச்சரிக்கப்படுகின்றதோ அவ்வளவுதான் லையும் உச்சரிக்கப்படுவதைக் காது உணரும். ஆகையால் ஐ என்னும் எழுத்து, சொல்லிற்கு நடுவிலாவது கடையிலாவது வருகின்றபோது அதன் மாத்திரை ஒன்றே.

இப்படித் தனக்குரிய இரண்டு மாத்திரையைக் கொள்ளாமல் வார்த்தைக்கு முதலில் ஒன்றரையும், நடுவிலும் கடையிலும் ஒன்றுமாகிக் குறுகுகின்ற ஐ என்னும் எழுத்தை இலக்கணநூல்களில் அஃகிய ஐ, என்றேனும் ஐகாரக்குறுக்கம்என்றேனும் அழைப்பர். ஐ என்ற எழுத்து அந்த எழுத்தின் பேரைக்குறித்து நிற்கின்றபோதுதவிர மற்றெல்லா விடங்களிலும் குறுகியே ஒலிக்கலாகும்.

**ஔ** என்ற எழுத்தும் அப்படியே ஔவை, வெளவால், மௌவால், என்ற இடங்களிலெல்லாம், அது இரண்டு மாத்திரை பெறுமல் ஒன்றரை மாத்திரையளவே உச்சரிக்கலாகும். இதற்கு அஃகிய **ஔ** என்றேனும் ஔகாரக் குறுக்கம் என்றேனும் பெயர். ஐகார ஔகாரக் குறுக்கங்களின் இலக்கணம் தெரிந்திருப்பது யாப்பிலக்கணம் கற்கும்போது பயன்படும். ஔகாரம் மொழியின் இடையிலும் கடையிலும் வராது.

189140

---

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[91-வது பக்கத் தொடர்ச்சி]

**ப்ராஸ்ப்பீரோ:**—இப்பொழுது, அவ் வுடன்படிக்கை (1)—நேப்ஸ் வேந்தன், எனக்கு நெடியநாட் பகைவனுதலின், என் தம்பியின் வேண்டுகோட்கு மிக விழைந்து செவிகொடுக்கின்றுன் (2); அதுதான், விதேயத்திற்கும், எத்துணைத் திறையோ யானறியேன் அதற்கும் பதிலாக, என்னையும் எனதையும் உடனே அரசினின்று வேரொடுந் தொலைத்து, அழகிய மிலானை அவன், எல்லாக் கவுரவங்களுடனும் என் தம்பிக்கு அளிக்கவேண்டுமென்பதாம் (3). அதன்படி, வஞ்சனைப் படையொன்று வருவித்து, இச் சதியினிற்கென்று விதித்தவொருநள்

(1) என் தம்பியும் நேப்ல்ஸ் அரசனும் செய்துகொண்ட உடன்படிக்கை என்னவென்று இப்பொழுது சொல்லுகின்றேன் கேள்—என்பது பொருள்.

(2) கொடுக்கின்றுன், என்று நிகழ்காலத்திற் கூறுவது சரித்திர நிகழ்வு (historic present). இப்படியே மற்ற இடங்களிலுங் கொள்க.

(3) அன்ட்டோனியோ, நேப்ல்ஸ் வேந்தனுக்கு அடங்கி அவனுக்குத் திறை செலுத்தவேண்டுமென்பதும், அதற்குப் பதிலாக நேப்ல்ஸ்வேந்தன் ப்ராஸ்ப்பீரோவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் மிலானைவிட்டுத் துரத்தி அம் மிலானுக்கு அன்ட்டோனியோவைப் பூரண அரசனுக்கவேண்டுமென்பதும், அவ்வுடன்படிக்கையின் அம்சங்கள். (விதேயம்—கீழ்ப்படிந்து வணங்குதல்.)

(4) நேப்ல்ஸ்வேந்தனது உதவிகொண்டு எழுப்பிய படையை, துரோகியாகிய அன்ட்டோனியே ஓரிரவு மிலா

ளிரவில் மிலானின் வாயிலை அன்ட்டோனியோ திறந்துவிட்டான் (4). இருளின் இடையே, இக் காரியத்திற்கு ஏவப்பட்டிருப்பவர், என்னையும், கதறியழுத உன்னையும் அங்கிருந்து விரைந் தகற்றினர்.

**மிராண்டா:**—அட, பாவமே! அக்காலம் நான் எவ்வாறு வாய்விட்டுக் கதறினேனென்பது எனக்கு நினைவில்லையாதலின், இப்போது மறுபடியும் கதறித் தீர்ப்பேன்: அன்னதற்கு என் கண்களைப் பிழியுமோர் முன்னமாகின்றது இது (5).

**ப்ராஸ்ப்பீரோ:**—இன்னுஞ் சிறிது கேள். அப்புறம், இப்பொழுது நம்மீதுள்ளகாரியத்திற்கு உன்னைக் கொணர்கின்றேன்; ஈதின்றி யிக்கதை முற்றிலும் இயைபற்றதாகிவிடும் (6).

**மிராண்டா:**—ஏனவர்கள் நம்மை அப்பொழுதே அழித்துவிடவில்லை?

**ப்ராஸ்ப்பீரோ:**—சிறுமி, நீ இது செவ்விதின் வினவினாய். என் கதை அக்கேள்வியைத் தூண்டுகின்றது. அன்பே, அவர் துணியகில்லார்; என் சனங்கள் என்பால் வைத்திருந்த அன்பு அத்துணை அருமையானது (7). அன்றியும், அக்காரியத்தின்மீது அத்துணைக் குருதிக்குறி பொறிக்கத் துணியாமல், (8) தம் தீய நோக்கத்திற்குச் சற்றே செவ்விய வண்ணந் தீட்டினர் (9). சுருங்கச் சொல்லின், நம்மை ஓர் தோணியுள் துரத்திக் கடலிற் சில காவதம் கொண்டுபோயினர். அங்கே, கயிறுமில்லை வடமுமில்லை பாயுமில்லை மரமுமில்லை சிதைந் தழிந்த ஒரு படகின் பிணத்தை அமைத்தனர். எலிகளும் அதனை இயற்கையறிவால் விட்டுத் துறந்தன (10). அதனில், நம்மைப்பார்த்துக் கனைக்கின்ற கடலிற்கெதிர் நாம் கதறுமாறு ஏற்றினர். காற்றினை நோக்கி நாம் நெட்டுயிர்ப்புவீங்க, இரக்கமுடன் எதிருயிர்த்து அது புரிந்தவொரு பரிவானது நமக்கு அன்புசேர் தீமையே செய்தது (11).

**மிராண்டா:**—அட! அப்பொழுது நானுனக்கு எத்துணை இடுக்கணா யிருந்தேனோ!

னிற்குள் இரகசியமாக விட்டுவிட்டான்—என்பது பொருள்.

(5) ப்ராஸ்ப்பீரோவின் வார்த்தைகளைக் கேட்ட மிராண்டாவிற்கு அழுகை வருகின்றது. "அப்பொழுது எப்படி அழுதேனென்பது எனக்குத் தெரியாதாகையால் இப்பொழுது ஒருமுறை அதனை நினைத்து அழுதுவிடுகின்றேன்" என்பது பொருள். அதற்கு=கதறி அழுவதற்கு, முன்னம்—குறிப்பு.

(6) பழைய கதையை இன்னுஞ் சிறிது சொல்லி, பிறகு, இப்பொழுது நிகழ்வதற்கு இருப்பவைகளைக் கூறுவேன். இதனைக் கூறுவிட்டால், முன்கதையைச் சொன்னதவ்வளவும் வீண்—என்பது பொருள்.

(7) சனங்கள் என்னிடம் கொண்டிருந்த அன்பு மிகவும் அதிகமாதலால், நம்மைக் கொன்றால் சனங்கள் தம்மைத் தொலைத்துவிடுவார் என்று அஞ்சி அவர் அதுசெய்யத் துணியவில்லை—என்பது பொருள்.

(8) குருதிக் கறை பொறித்தல்—நம்மை இரத்தம் பெருகக் கொன்று காரியத்தை முடித்துக்கொள்ளல்.

(9) நோக்கங்கொடியதேனும், நம்மைக் கொலைசெய்யுமளவு கொடுமையைக்காட்டாமல் தம்காரியத்தைச்சாதித்துக் கொண்டனர்—என்பது பொருள்.

(10) படகின் பிணம் என்றது, உடைந்தழிந்திருந்த அதன் நிலைமையைக் குறிக்கின்றது.

கப்பல் ஒன்று ஒரு பிரயாணத்தில் முழுகிவிடுவதாகிருந்தால், அக்கப்பலில் இருந்த எலிகள் அதனை எப்படியோ தம் இயற்கையறிவால் தெரிந்துகொண்டு, கப்பல் புறப்படுவதன்முன்னரே அதனைநீத்து அகன்றுவிடும் என்று நம்பப்படுகின்றது.

(11) என் கதி இப்படியாயிற்றே வென்று பெருமூச்சு விட்டேன். காற்றானது, நான் பெருமூச்சு விட்டிருந்த நிலையைக்கண்டு மனமிரங்கித்தானும் பெருமூச்சுவிட்டது. அன்புடன் அது இப்படிச் செய்ததாலும், காற்றின் வேகம் மிகுந்ததால் நம்முடைய ஆபத்து அதிகமே யாயிற்று என்பது பொருள். (இது தற்குறிப்பேற்ற அணியின்பாற் படும்).

# தேவகி

[106-வது பக்கத் தொடர்ச்சி]

## அத்தியாயம் 4.

அன்றைய இரவு விடிந்தது. பகலவனும் கீழைக் கடல் முளைத்தான். என் மாமன் இறந்த செய்தி குடந்தை நகரெங்கும் பரவ, அந்நகரே துயர் கொண்டு எம்மனையைச் சூழ்ந்துகொண்டது. உற்றாரும் உறவினரும் வந்து கூடினர். பின் சவக்கிரியைகள் முறையே நடந்தன. மாதமும் ஒன்று கழிந்தது. வருவாரும் போவாருமாய் மனித நடமாட்டம் அதிகமாயிருந்ததெனினும் எனக்கு மாத்திரம் மாமனில்லா இவ்வீடு பாழடைந்துகிடந்தது. ஓரறையில் தனியிருந்துகாலத்தைக் கடத்திவந்தேன். நாள்செல்லச்செல்ல என் மாமியும் என் மீது தன் கருத்தைச் செலுத்த வாரம்பித்தாள். அவள் மக்களும் அவள்வழி நணிபற்றி ஆய்க்குப் பிள்ளையென்னும் உறவினை அளந்து காட்டினர். அவளது செயலும் சொல்லும் இம்மனையில் நானிருப்பதை அவள் விரும்பவில்லை என்பதை விளக்கின. அமயம் நேரும்போதெல்லாம் தண்டச்சோறு தின்கின்றேன் என்றும், நான் வீட்டை விட்டகலலாம் என்றும், சோம்பேறி மடம் அம்மனையன்றென்றும் என்னைச் சொற்களால் சுடலானாள். அம்மனையைவிட்டுச் செல்லலாமா என்று அடிக்கடி எண்ணுவேன். அக்காலை என் மாமனது கட்டளை வந்து குறுக்கிடும். இன்னபடி அங்கிருப்பதா அல்லதுஉடனே துறந்தகல்வதா என்று எண்ணி யெண்ணிக் கலங்கலானேன். ஆயினும், என் மாமன் கட்டளையாகி என் மனத்தில் ஊன்றிய வேருக்கு மாமியோ வெந்நீர் வார்த்துவந்தாள். நான் பள்ளிக்குச்செல்லும் நேரந்தான் சஞ்சலமிலாத நேரம். மாமியின் கொடுமையும் மாமனது இறுதிமொழியும் என் மனத்துள் புக்குழக்க வழியொன்றுந் தெரியாமல் ஓராண்டு அவ்விடத்தே கழித்து விட்டேன்.



ஒருநாள் நான் பள்ளிக்குச் சென்றபொழுது என் தோழியர் இருவரையும் பள்ளியின்கண் காணவில்லை. பள்ளியிற் பாடமும் துவக்கப் பெற்றது; சிறிது நேரம் சென்றதும் குமுதம் மாத்திரம் வந்து சேர்ந்தாள். வந்தவளை விரைந்து நான், 'நம் துணைவி கோதை ஏன் வரவில்லை' என்று கேட்டேன். 'காய்ச்சலாம், என் தந்தை கூறினர்' என்றாள். அன்று பள்ளிக்கூடம் முடிந்தது. பிறகு கோதையின் வீடுசென்று அவளைப் பார்த்துவிட்டு எங்கள் வீட்டிற்குச் செல்வதென்று தீர்மானித்துக்கொண்டோம். பள்ளி கலைவதில் குறிக்கொண்ட என் மனம் பாடத்தைத் தொடரவில்லை. மாலையையே எதிர்நோக்கி யிருந்தேன். கோதையைப் பற்றிய காய்ச்சலெல்லாம் என்னுள்ளத்திலும் காயத் துவக்கிற்று. பாடசாலைக் கடிகாரத்தையும், அதைச் செய்தவனையும் சபித்த வண்ணமா யிருந்தேன். கடைசியில் மாலையும் வந்தெய்தியது. பாடசாலையும் கலைந்தது. நானும் குமுதமும் கோதையின் வீட்டிற்குப் புறப்பட்டோம். வீட்டினுள் விரைந்து சென்ற நாங்கள் படுக்கையில் சோர்ந்திருந்த கோதையைக் கண்டோம். மெல்ல அவள் படுக்கையின் அருகு சென்றேன். எம்மைக் கண்ட அவள் விரைவினில் எழுந்து வரவேற்றாள். படுக்கையின்மீது நானும் குமுதமும் உட்கார்ந்துகொண்டோம். உட்கார்ந்த நான் அவள் உடல்நிலையைப் பற்றி ஆயிரம் கேள்விகேட்டேன். என் கேள்விகளுக்கு விடையையும் நான் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் மூவரும் நீண்ட நேரம் அளவளாவிக்கொண்டிருந்தோம்.

இன்னபடி கவலையற்று நானிருப்பதைக் காணத் தரியாமல் பொழுது மிகவும் விரைந்து நடந்தது. வையம் இருளின் வயமாக வீடுகள்தோறும் விளக்கேற்றப் பெற்றன. ஏற்றிய விளக்குக்கள் என் மாமியின் நினைவை என்பால் கொளுத்திக் காட்டவே, நான் மிகவும் அஞ்சினேன். அஞ்சிய நான், என்னரும் தோழி கோதையைப் பார்த்து, "கோதாய், என் செய்வேன், விடைதருவாய். உன்னை விட்டகல மனமில்லையாயினும், இன்னுந் தங்கி நின்னுடன் அளவளாவ இயலாதவளாய் இருக்கின்றேன். நாளைமாலை, மீண்டும் நிச்சயமாய் வருகின்றேன்" என்று வருத்தத்துடன் கூறினேன்.

என் வார்த்தைகள் கோதையின் முகப்பொலிவை யகற்றியது. "அடி தேவகி, உன் வரவால் அகன்றிருந்த வேதனையும் மெய்ச்சலிப்பும் மீண்டும் என்னைப் பற்றுமாறு செய்துவிட்டுப் போவதும் கேண்மைக்குப் போதுமோ, குமுதமே சொல்லட்டும்" என்று கூறி எனது விடைக்கு எதிர்பார்த்தாள்.

"குமுதம் இருக்கட்டும், கேண்மைக்குப் போதுமோ என்னவோ, அறியேன். என் மாமியையே கேட்கவேண்டும். நாழிகை ஆகின்றது. மன்னித்தருள்வாய்" என்றேன்.

"கேண்மையின் இலக்கணத்தை அவள் வாயிலிருந்து கேட்டறியக் குடந்தை மாதர்சங்க முளது. நான் கேட்டுத் தெரிந்துகொள்வானேன்! என் இனியாய், இனிநீ உன் மாமிக்கு அஞ்சவேண்டா. என்வீடு உனதுமாயிற்று. இங்கு நீ என் உடன்பிறப்பாய் இருப்பதற்கு இடையூறொன்றுமில்லை. என் அன்னையும் தந்தையும் உன்னைத் தம் பெண்ணெனக்கொள்வர். உன்னுறவால் என்னேயும், என்னுறவால் உன்துயரும் இன்றுடன் அறுவதாகுக" என்று பரிவுரை கூறிக் குமுதத்தின் முகம் நோக்க, அவளும் 'ஓம்' என்றாள்.

கோதையின் பரிவு என் மனதை உருக்கியது. 'என் உடன்பிறப்பேயான கோதாய், உன் நட்பின் பெருமையை மனமாறப் போற்றுகின்றேன். என்னை வஞ்சித்த ஒரு கடவுளை, இன்று நீ காட்டிய அருமையின் அனுபவத்தை எனக்களித்தவொரு செயலுக்காக நன்றியுடன் தொழுகின்றேன். பெற்றோர் தரும் அன்பின் தன்மையை இன்று உன் நட்பினில் கண்டுகொண்டேன்; உய்ந்தும்விட்டேன். எனக்கினி ஒரு குறையில்லை. யார்மீதும் கோபமில்லை. என் மாமியும் இன்று நல்லவளேயாயினாள். அனியள்யான்செய்த தீவினைக்கு அவள்மீது கோபங்கொள்வதால் யாது பயன். கடவுளின் கருணையைக் காட்டித்தந்த பெருமகள் கோதை வாழி வாழி" என்று பதிலுரைக்க எதிரிருந்த கடிகாரம் எட்டடித்தது. உடனே இனியும் ஈண்டுத் தாமதித்திருத்தல் கூடாதென எழுந்தேன். என்னைத்தேடி வந்த தையம்மாளும் அவ்விடம் வந்து சேர்ந்தாள். பின்னர்க் கோதையின் விடைபெற்றுத் தையம்மாளுடன் வீடடைந்தேன்.

வெறும்வாயை மெல்கின்ற என்மாமிக்கு அவலும் அகப்பட்டால் என் செய்யாள். வீட்டினுள் நுழைந்த என்னை இடைமறித்துச் சீறி நோக்கினாள். இதனைக் கண்ட நான் பூமியை நோக்கியவண்ணம் நடந்தேன். இப்படி நான் நடந்தது பொங்கும் அவள் கோபத்தைப் பெருக்கியது. 'நில்லடி', என்றாள். இனி என்ன நடக்குமோ என்று கலங்கியவண்ணம் நின்றேன்.

"அடி பேய்மகளே, நெடுமரமே, இந்நேரம் எங்குச் சென்றிருந்தாய். எந்த மகனை நீ பற்றித் திரிந்தாய்" என்று அவள் ஈரமிலாப் பெருவாய் வந்த சொற்கள் என்னுள்ளத்தில் பாய்ந்து வருத்தின. எனது இயற்கைப் பொறுமையும் அகன்றது. 'ஐயோ கடவுளே' என்று கூவினேன். என் வல்வினைப் புன்தலையை என்னிருகரத்தினாலும் இறுகப்பற்றிக்கொண்டேன். என் உள்ளத்துடிப்பெல்லாம் சொல்லாய் மாறி என் வாய்வழி வெளிவந்தது. "ஏ கருணையற்றகடவுளே, கண்கெட்டாய், மதியும் கெட்டாய். உன் அராவணையும் பெருந்துயிலும் என் உள்ளமென அழியாதோ. தண்ணிய நின் பாற்கடலும் என் கண்ணேபோல் வற்றாதோ. கன்னெஞ்சக் கடவுளே, என்பால் ஏனிந்தக் கொடுமை! என் செய்வேன்." என்று நான் அலற, எதிரிருந்த அக் கொடும்பாவி அருகிருந்த மேஜையொன்றின் மேலிருந்த ஒருபெரிய புத்தகத்தை என் மீது ஏவினாள். என் முகத்தை எய்திய அப்புத்தகம் என்னையும் தன்னையும் நிலைகுலையச்செய்தது. அதனுடனும் அவள் கொண்ட ஆத்திரம் அடங்கவில்லை. ஊதையெனச் சீறினாள். சீறி என்னைப் பந்தெனக் காலால் எற்றினாள். அவளது பெருவாயின் ஈரம்வறள ஏசினாள். பின் செய்வதற்கொன்றும் தோன்றாமற் போகவே, 'என் குலத்திற்கு மறுவாயும், என் பணத்திற்குக் கேடாயும் நீ படித்தது போதும்' என்று சொல்லி அவ்விடம் விட்டுப் பெயர்ந்தாள்.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[114-வது பக்கத் தொடர்ச்சி]

### உகராதி

353 உக முடிவும் பூமியு முரகமும் நாளும்.
354 உக்கங் [1]கோழியுந் தீயு மேறும்
ஆலவட்டமு மிடையும் பக்கமும்
விசிறியு மெனவே விளம்பினர் புலவர்.
355 உகள மிட முடிவு மிரண்டு மாகும்.
356 உச்சி நண்பகலு முச்சியு மொடுக்கமும்.
357 உசிதம் நேரும் வளைதலும் நட்பும்
உசிதமுங் கூப்பிடலு முரைக்க லாகும்.
358 உசாவே கருதலுந் துணையு மாகும்.
359 உஞற்றுற் சாகமு மூக்கமுந் தப்பும்.
360 உடலே பொருளு முடம்பு மாகும்.
361 உடு நாவாயு [2]மோடக் கோலும்
நட்சத் திரமுங் கிடங்கும் விண்ணும்
அம்புங் கழமையு மறைய லாகும்.
362 உட்கை உள்ளங் கையு [3]முட்கலும்.
363 உடுக்கை துகிலு மோர்வாச் சியமும்.
364 உடைகுடை வேலுங் கூறையுஞ் செல்வமும்
முள்ளுடையு மெனவே மொழிய லாகும்.
365 உடைமை தாளுங் கலனையுங் கூறையும்.
366 உட்குத லச்சமும் நாணமு மாகும்.
367 உணவு சோறு மழையு முண்டலும்.
368 உண்டி யுண்டலுஞ் சோறு மாகும்.
369 உண்டை படையு றுப்புந் திரட்சியும் பிச்சையும்.
370 உண்டாட்டு விளையாட்டும் பெண்விளை யாட்டும்.
371 உணர்வு ஊடறீர்தலு மறிவுந் தெளிவும்
உணர்ச்சி மொழிவு முரைக்க லாகும்.
372 உதும்பர மத்தியுஞ் செம்பு மாகும்.
373 உதகம் பூமியும் நீரு மாகும்.
374 உதியன் பாண்டியனுஞ் சேரனு மாகும்.
375 உத்தர மோர்நூலும் வடக்கும் மேலும்
எதிர்மொழி யுமென வியம்ப லாகும்.
376 உத்தி படப்பொறியுந் திருவி னுறுப்பும்
நுண்மைப் பொருளு மார்கலியுந் தேமலும்.
377 உத்தரி பரியும் யானையும் பாம்பும்.
378 உத்திர மோர்நாளு முத்திரக் கட்டையும்.
379 உத்தர குருபஞ்ச பாண்டவருஞ் சாலியும்.
380 உந்தி கொழுப்பூழும் நீர்ச்சுழியுங் கடலும்
நதியுந் தேருருளு முயர்ச்சியுந் துணையும்
நீரும் நடுவும் மகளிர் விளையாட்டும்
யாழுறுப் புமென நவில லாகும்.
381 உப்பே கடலு மினிமையு முவரு
மகளி ராடலு மிரதமு மாகும்.
382 உப்பள மளமுங் கழிநிலமு மாகும்.
383 உம்பர் தேவரு முயர்நிலமு மேலும்
ஆயரு மெனவே யறைய லாகும்.
384 உம்பல் நற்குலமுந் தந்தியும் விலங்கும்.
385 உமட்டிய ரென்ப வியன்கடற் பிணுக்களும்
உப்புவில் பெண்களு முரைக்க லாகும்.
386 உயவை காக்கணமுங் கான்யாறு மாகும்.
387 உயிரே காற்றுஞ் சீவனு மாகும்.
388 உரமார்பு மூக்கமும் ஞானமும் வலியும்.
389 உரிய பொறிதிரு வுறுப்பு முத்தியும்.
390 உரைபொருளும் மொழியுந் தேய்வு மோசையும்.

(பிரதி) 1. கோளியுக். 2. மோட்டுெ. 3. முறவும்.

391 உருவூ ரட்டையும் நிறமும் வடிவும்.
நோயும் நாவாயும் புள்ளு மாகும்.
392 உருப்பு வெப்புந் துக்கமு மூதித்தலும்.
393 உருத்தல் கோபமுந் தோற்றமு மாகும்.
394 உரியோர் மூதறிந் தோருமூத் தோரும்.
395 உருத்தி தொழிலும் உரிய கைம்முதலும்.
வளர்ச்சியுஞ் செய்தூணும் வழங்க லாகும்.
396 உலகம் பாருந் திக்கு மாகாயமும்
உயர்ந்தோரும் குணமும் வியனும் சனமும்
நாடு மெனவே நவில லாகும்.
397 உலவை மரக்கோடும் விலங்கின் கொம்பும்
காற்றுந் [4]தழையுங் கழற லாகும்.
398 உலகர் பாண்டியரு முலோகரு மாகும்.
399 உலக்கை யுலக்கையுங் கடலு மோணமும்.
400 உலம்பட் டாடையுங் கற்றிரளு நீரும்
துன்பமுங் காற்றுஞ் சொல்ல லாகும்.
401 உவணங் கருடனு முயர்ச்சியுங் கழுகும்.
402 உவளக மந்தப் புரமும் பக்கமும்
நீர்த்தாழ்வு மதிலும் வாவியு முப்பளமும்
ஆய ஹுரு மறைய லாகும்.
403 உவப்பு மகிழ்ச்சியு முயர்வு மாகும்.
404 உவா விளையோனுங் கடலும் யானையும்
இருவகை யுவாவு மிசைத்தனர் புலவர்.
405 உழையே மானும் யாழிலோர் நரம்பும்
ஒன்று மிடமும் அருக்கன் றேவியும்.
406 உழுவனிலை பெற்ற வன்பும் புணர்ச்சியும்
பெற்றியு மெழுமையும் பேச லாகும்.
407 உழப்பு முயற்சியும் வலியு முற்சாகமும்.
408 உழிஞைசிறு பூளையு மதில்வளைத்தலு மதிலும்.
409 உழுவை புலியு மெருமையு மோதுவர்.
410 உளைசத்த வொலியு மெழுத்தி னோசையும்
பரிமே றகட்டிய மயிரும் ஓதியும்
ஆண்பான் மயிரும் அஃறிணை மயிரும்
பரிக்கடி வாளத்தின் றளையும் பகர்வர்.
411 உள்ளலோர் பட்சியும் நினைவு மாகும்.
412 உளர்தல் சிதறலும் நீவலு மாகும்.
413 உள்ள முயற்சியு நெஞ்சு மாகும்.
414 உறையோ ரிலக்கமும் ஒழுகலுங் காரமும்
உள்ளியும் பாலூறு பிரையுந் [5]துளியும்
படைக்கூடு மருந்தும் பொருளுமுவர் நீரும்
வாணாளு மூணும் இடைச்சொல்லும் நீளமும்
வெண்கலமு முறையு முறைதலுங் குறியும்
[6]பீடோரும் போர்வையும் பேச லாகும்.
415 உறவி யுலைக்களமு முயிரு முறவும்
எறும்பும் நீரூற்று மிசைத்தனர் புலவர்.
416 உறழ்விடை யீடு மொப்புஞ் செறிவும்
புணர்வும் [7]காலமும் பூசலு மாகும்.
417 உறையுள் சயனமும் மனையுமூர்ப் பொதுவும்
நாடும் கோயிலும் நவில லாகும்.
418 உறையூர் மருதஞ் சார்ந்த வூரும்
சோழனுறை யூருஞ் சொல்ல லாகும்.
419 உறுகணோயும் துன்பமும் வறுமையும்
பயமு மெனவே பகர லாகும்.
420 உறுதி கல்வியு நன்மையு மாகும்.
421 உறப்பு படையுறுப்பு முடலு மங்கமும்.
422 [8]உன்னல் நினைவு நெஞ்சு மாகும்.

உகர வருக்கம் முற்றிற்று.

(பிரதி) 4. கழையும். 5. துளியும்.
6. பீடொரும் பொருரவையும்.
7. காதபமும். 8. உன்னம்.



# யாப்பிலக்கணம்

[114-வது பக்கத் தொடர்ச்சி]

### பாக்களுக்குரிய ஓசை

முன்னிதழில் மோனை முதலியவற்றின் தொடை விகற்பங்களையும், அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை என்பவற்றிற்குரிய இலக்கணத்தையும் கற்றோம். இவ்விதழில் செய்யுட்களுக்குத் தளையால் ஏற்படும் ஓசையைப்பற்றிக் கவனிப்போம்:

தளையால் ஏற்படும் ஓசை நான்கு வகைப்படும். அவை செப்பல் ஓசை, அகவல் ஓசை, துள்ளல் ஓசை, தூங்கல் ஓசை என்பன. இவற்றுள் செப்பலோசை வெண்டளையால் உண்டாவது; அகவலோசை ஆசிரியத் தளையால் உண்டாவது; துள்ளலோசை கலித்தளையாலும், வெண்டளையோடு பொருந்திய கலித்தளையாலும், பல தளைகள் விரவியும் உண்டாவது; தூங்கலோசை ஒன்றிய வஞ்சித்தளையாலும், ஒன்றா வஞ்சித்தளையாலும், இவ்விரண்டு தளையும் விரவியும் வருவது. இவற்றுள் ஒவ்வொன்றும் மூவகைப்படும். அவை ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் எனவும்; ஏந்திசை யகவல், தூங்கிசை யகவல், ஒழுகிசை யகவல் எனவும்; ஏந்திசைத் துள்ளல், அகவல் துள்ளல், பிரிந்திசைத் துள்ளல் எனவும்; ஏந்திசைத் தூங்கல், அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் எனவும் வழங்கப்படும்.

### செப்பலோசையின் வகை

1. ஏந்திசைச் செப்பலோசை:—இது வெண்சீர் வெண்டளையால் வருவது.

உ - ம்:—"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

2. தூங்கிசைச் செப்பலோசை:—இஃது இயற்சீர் வெண்டளையால் வருவது.

உ - ம்:—"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்."

3. ஒழுகிசைச் செப்பலோசை:—இது வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் கலந்து வருவது.

உ - ம்:—"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்."

### அகவலோசையின் வகை

1. ஏந்திசை யகவலோசை:—இது நேரொன்றாசிரியத் தளையால் வருவது.

உ - ம்:—"போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே."

2. தூங்கிசை யகவலோசை:—இது நிரையொன்றாசிரியத் தளையால் வருவது.

உ - ம்:—"அணிநிழ லசோகமர்ந் தருள்நெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே."

3. ஒழுகிசை யகவலோசை:—இது நேரொன்றாசிரியத் தளையும் நிரையொன்றாசிரியத் தளையும் கலந்து வருவது.

உ - ம்:—"குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர் புரையும் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே."

### துள்ளலோசையின் வகை

1. ஏந்திசைத் துள்ளலோசை:-இது கலித்தளையால் வருவது.

உ - ம்:—"முருகவிழ்தா மரைமலர்மேல்
முடியிமையோர் புடைவரவே
வருசினனார் அருமறைநூல்
வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுறியா
எதிரியகா தியையெறியா
நிருமலராய் அருவினராய்
நிலவுவர்சோ தியினிடையே."

2. அகவல் துள்ளலோசை: —இது வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவி வருவது.

உ - ம்:—"செல்வப்போர்க் கதக்கண்ணன்
செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர்
முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ
இடைநுழையும் மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை
மருமம்பாய்ந் தொளித்ததே."

(குறிப்பு:—இச்செய்யுள் யாப்பருங்கலக் காரிகையில் மயக்க மில்லாக் கலித்தளைக்கும், யாப்பருங்கல விருத்தியில் சிறப்புடைக் கலித்தளைக்கும் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. யாப்பருங்கலக் காரிகையிலேயே வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவி வந்த அகவல் துள்ளலோசைக்கும் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இச்செய்யுளில் ஓரடியின் கடைச்சீருக்கும் மற்றோரடியின் முதற்சீருக்கும் இடையில் வெண்டளை பொருந்தியுள்ளது. ஆகையால், கலிப்பாவிலும் வெண்பாவிற்போலச் செய்யுள் முழுவதும் தளை நோக்கவேண்டும் என்பது புலப்படுகின்றது.)

3. பிரிந்திசைத் துள்ளலோசை:—இது கலித்தளையும் பிறதளைகளும் விரவி வருவது.

உ-ம்:--மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந்த வையன்ன நொப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரும் எமஞ்சார் துறைவகேள்.

### தூங்கலோசையின் வகை

1. ஏந்திசைத் தூங்கலோசை:—இஃது ஒன்றிய வஞ்சித்தளையால் வருவது.

உ - ம்:—"வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்போடு தொழுதேத்தினர்
நாளும்,
மயலா நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே."

2. அகவல் தூங்கலோசை:—இஃது ஒன்றா வஞ்சித் தளையால் வருவது.

உ - ம்:—"வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூரறிவனைக்
காணார்,
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே."

3. பிரிந்திசைத் தூங்கலோசை:—இஃது ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றா வஞ்சித்தளையும் விரவி வருவது.

உ - ம்:—"மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு,
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே."

# பொருளீட்டல்

ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னைப் புலைநெஞ்சே—போவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

நீரும் நெய்யும் சேரினும், உண்மையும் ஊதியமும் சேரா.

மனிதர்தம் மனோபாவம் பலவகையா யிருப்பினும், அனைவரும் பொருள்தேடும் நோக்கத்திற் சமானமான வர். ஆசைகள் அநேகமுள வெனினும், அவையெல்லாம் பொருளாசையி லடங்கினவையெனலாகும். மனிதர் நோக்கம் எதுவாயினும், முதற்கவலை பொருள் கவலையே. நமக் கிதந்தரும் பதம் பிறிதென்று நாம் கருதினும், அதை அடைதற்குப் பொருளே மூலமென்று நாம் நம்புகின்றோம். பொருளை உபயோகிக்கும் வழிகளைப்பற்றி மனிதர் அபிப்பிராயங்கள் வித்தியாசப்படினும், அனைவரும் பொருளின் அவசியத்தையும் மதிப்பையும் அங்கீகரிக்கின்றனர். "பணம் பத்தும்செய்யும்" என்பது பழமொழி.

வென்றி யாக்கலு மேதக வாக்கலுங்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலு
மன்றியுங் கல்வி யோடழ காக்கலும்
பொன்றுஞ் சாகத்தி னய்பொருள் செய்யுமே.

பொன்னி னாகும் பொருபடை யப்படை
தன்னி னாகுந் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொருள்
துன்னுங் காலைத் துன்னதன வில்லையே.

பணத்தின் உதவியால் படைக்கலாகாதது ஒன்று மில்லை என்று தோன்றுகின்றது. "கொண்டாட்டம் குலம்புனைவும்," வண்டார் பூங்குழலார் இன்பமும், வானோங்கு மாடங்களும் தோட்டங்களும், வாகனமும் பரிஜனமும், ஊரார் புகழ்ச்சியும் செல்வரையே சேர்கின்றன. "சேராதன வுளவோ பெருஞ் செல்வர்க்கு" என்கின்றார் கம்பரும். ஆதலின், பொருள் பல்வகை யின்பங்களுக்கும் ஆதாரமாய் நிற்கின்றது.

பொருளின் அவசியம் இவ்வாறிருப்பதால், ஒவ்வொரு மனிதனும் செல்வம்சேகரிப்பதில் மனத்தைச் செலுத்துவது இயற்கையே. உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவும் இதத்தைத் தரக்கூடியவையுமான கைத்தொழில், சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய துறைகளில் ஜனங்கள் இறங்கி உழைத்துத் தமது சிரமத்துக் கேற்ற சன்மானம் எதிர்பார்ப்பதும் இயற்கையே. பொருளீட்டு மாசை தருமத்துக்குக் கட்டுப்பட்டிருந்தால் ஒருவித கேடும் விளையாது. தாம் விழையும் பொருளுக்கேற்ப உழைத்தும், உலகத்துக்குத் தாம் செய்யும் உதவியால் வரும் ஊதியத்தை அநுபவித்தும் வருபவர் அறத்தின் வழி நிற்பவராவர். முயற்சியால் செல்வமெய்தின் அச்செல்வம் சிறப்பாம்.

ஆனாலோ, மனிதர் கொள்கின்ற ஆசை அவர் முயற்சிக்கும் யோக்கியதைக்கும் தக்கவா றிருப்பதில்லை. உழைப்பின்றியே பொருளீட்டுவதில் நாட்டமுடையோர் அநேகர். அத்தகையோர் சுற்று முற்றும் நோக்கி, பணம் தேடும் வழிகள் எவையேனு முளவோ என்று ஆராய்கின்றனர், இவ் வழிகளைக் கண்டுபிடிக்கப் பெரிய ஆராய்ச்சி அவசியமில்லை. தருமசிந்தையும் நற்புத்தியுமுடையோர் நீடித்தமுயற்சியால் தமது வாழ்நாளின் இறுதியிலுங்கூட ஈட்டவொண்ணாத பொருளை அயோக்கியர் பற்பல உபாயங்களினாலும் வஞ்சனைகளினாலும் சில நாட்களில் எய்துகின்றனர். நம்பிக்கையுள்ளநல்லவர் கைப்பொருள் எளிதில்பொய்யர் கைவசமாகின்றது. இளைஞர், அறிவீனர், உன்மத்தர் முதலியோரது செல்வம், தந்திரத்தினாலும் பலவந்தத்தினாலும் எளிதில் அபகரிக்கப்படுகின்றது. செல்வம் தீய வழிகளில் சேகரிக்கப்படினும், அது தன்னை யடைந்தவருக்குப் பேருதவிபுரிகின்றது. பலர் கண்களைப் பகட்டுகிறது. அவர்கள் செய்யும் அக்கிரமங்களை மறைத்து, அவற்றை வெளிப்படுத்த எண்ணங்கொண்டவர் வாயையும் அடக்குகிறது. மிகப் பெரிய திரவியத்தைச் சேகரித்தவர்களிடம் இவ்வளவு பொருள் எப்படிச் சேர்ந்தது என்று கேட்கவும் ஜனங்கள் பயப்படுகின்றார்கள். எளியோர் பயந்து பயந்து அக்கிரம வழிகளில் சிறிது பொருள் தேடுவதைப் பார்த்துத்தான் மனிதர் கோபாவேசங்கொண்டு அவ் வஞ்சகரைச் சந்திக்கிழுக்கின்றனர். இந்தக் கீழ்ப்படிகளைத் தாண்டி மேற்சென்ற அயோக்கியரைப் பெருமை பாராட்டியும் கொண்டாடியும் புகழ்ந்தும் வருவது பெரும்பாலோர் இயற்கை. பணம் சேர்க்கச் சேர்க்க அதனால் விளையும் நலத்தையும் பலத்தையுமறிந்து அறிவிலிகள் செய்யும் வஞ்சனையாலும், அதனைப் பொருக்கெனப் பெறவேண்டு மென்னும் அவசரத்தாலும் உலக வாழ்க்கையின் சமாதானம் நிலைகுலைகின்றது. பொருள் சேர்ந்தால் பயம், சேராவிடின் துக்கமாதலின், மனிதர் இருகிளையாய்ப் பிரிந்து, ஒரு திறத்தார் வஞ்சிப்பதும், மற்றொரு திறத்தார் அவ் வஞ்சனையை எதிர்ப்பதுமாய் நிற்கின்றனர். உலகத்தின் தற்கால நிலைமையை உன்னுங்கால், மனிதர் ஒருவருக்கொருவரும், தேசங்கள் ஒன்றற்கொன்றும் நம்பிக்கை குன்றியிருப்பது வெளிப்படையாகிறது. காகிதமும் கையெழுத்தும், சாக்ஷியும் அரசாங்கத்தினரது முத்திரைகளு மில்லாமல் ஒரு விவகாரமுமில்லை. மனிதர்களுடைய துன்மார்க்கத்துக்கும் நம்பிக்கைத் துரோகத்துக்கும் இதைவிட என்ன அத்தாக்ஷி வேண்டும்?

பணத்தைச் சேர்ப்பதற்குரிய தந்திரவழிகள் ஏகதேசம் அறநெறிக்கு ஏற்றனவல்ல; சில, தருமத்துக்கு நேர் விரோதம்; அவை அறத்தை மறந்தன்றி, அறிந்தே அறவே அகற்றும் ஆறுகள்; மற்றும் சில, அறமோ மறமோ என அயிர்ப்பைத் தந்து அதர்மத்தையே விளைவிப்பனவாகி நல்லோரையும் ஈர்த்து, சாதுக்களையும் மருட்டும் தன்மையன. இன்னவர் மற்றோரைப்போல் நெடுங்காலம் தீயவழிகளில் இழிந்துழலாமல் சீக்கிரம் நல்வழிக்குத் திருந்துகின்றனர்.

முற்காலத்தில், நிலச்செழிப்பால் எல்லாரும் இனிது அருந்தியிருக்கப் போதிய அளவு உணவு கிடைத்திருந்ததால், சண்டை சச்சரவில்லை; போட்டியும் பொய்யுமில்லை; சமராஜ்யம் சமாதானமாய் விளங்கிற்று. அக்காலம் மீண்டு வராது. இக்காலம், உழைப்பவருக்கு உரிமை உண்டாகிறது. உழைப்பின்றி உண்ணக் குறுக்குவழி தேட அநேகர் முயல்கின்றனர். மரம் நடாமல் பழம் தின்னவும், போருக்குப் பின்நின்று, வெற்றியின் வெகுமதிகளுக்கு முன்னிற்கவும் ஆயத்தமானவர் அநேகர்.

பொருளீட்டுதலால் அறத்துக்கு விளையும் தீமைகளை உன்னிச் சிலர் பொருளை வெறுத்துவிடுகின்றனர். இவர்கள், தம்மால் அடக்கி ஆளமுடியாத பயத்தால், பொருள் நசையை நசுக்கிவிடுகின்றனர். இத்தகையோர் தீமையை ஒழிக்கின்றாரெனினும், பொருளால் பெறக்கூடிய நன்மையையுங்கூட இழந்து, உதாசீனராய்க் காலத்தைப் பிறர்க்குப் பயனின்றிக் கழிக்கின்றனர். ஜனசமூகத்துக்கு இவர்களால் தீமையில்லை, ஆனால் நன்மையுமில்லை.

நமது வாழ்நாளின் இன்பத்துக்குப் பொருள் இன்றியமையாதது. இப்பொருள் தருமவழிகளிற் காட்டிலும் தீய நெறிகளில் எளிதிலடையலாம். எப்பொழுதும் மானிடர் மனத்துள் நின்று உந்தும் பொருளாசைக்குப் பரிகாரம் கடவுள் சிந்தனையும், 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்,' என்னும் மனோதிடமுமே.




சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி
### நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அநுபந்தம் பெற்றது. சுமார் 1,000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

### திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அநுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு 0-6-0

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**



### திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானாய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருரு பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர் சென்னை.



## ANCIENT JAFFNA

**MUDALIAR C. RASANAYAGAM c. c. s.**

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

KALANILAYAM
Purasawalkam, Madras.

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். மூட வுக்கு முயல வேண்டா. விளம்பிநைவ் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் அவர்களது, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம் பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எமெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



# வர்த்தமானம்

**திரு. வடிவேலு செட்டியாருக்குப் பிரிவுஉபசாரம்:**— சென்னைத் தங்கசாலை வீதியிலுள்ள ஹிந்து தியலாஜிகல் உயர்தர வித்தியாசாலையில், சென்ற 37 ஆண்டுகளாகத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்து உபகாரச் சம்பளம் பெற்று விலகும் வேதாந்த தர்க்கபோதகாசிரியரான ஸ்ரீ கோ. வடிவேலு செட்டியாருக்குப் பிரிவுபசாரம் கூறச் சென்றவாரம், ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தலைவர், செட்டியாரவர்களின் புலமையைப் பாராட்டிப் பேசி அவரது உருவப்படத்தைத் திறந்துவைத்தார். பள்ளிக்கூட மாணவர்களும், பழைய மாணவர்களும் தனித்தனியே செட்டியாரவர்களுக்கு உபசாரப் பத்திரங்களைப் படித்துக் கொடுத்தனர். மேற்படி பள்ளிக்கூட நிர்வாக நிலைய அதிகாரியான ஸ்ரீமான் நாராயணதாஸ் கிர்தாரிதாஸம், ஸ்ரீமான்களான T. P. மீனாக்ஷிசுந்திரம் பிள்ளை, லோகோபகாரி ஆசிரியர் P. S. நெல்லையப்பப் பிள்ளை, பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் K. அரங்கஸாமி ஐயங்கார் முதலிய பலர் செட்டியாரவர்களைப் பாராட்டிப் பேசினர்.

இறுதியில் செட்டியாரவர் தமது நன்றியறிதலைத் தெரிவித்துச் சிறிதுநேரம் பேசினர். பின் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

***

**ஐரோப்பியமாது இந்துவானார்:**—மிஸ் கிளாடிஸ் என்னும் ஐரோப்பிய மாது சென்ற வாரம் சென்னையில் ஆரிய சமாஜ விதிப்படி ஹிந்துவானார் என்றும், பின், T. R. சுந்தரம் என்பவரை மணந்துகொண்டார் என்றும் தெரிகின்றது.

***

**ஸ்ரீ சங்கராசாரியாரின் அறவுரை:**—சமீபத்தில் சென்னையில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் சிஷ்ய கோஷ்டிகளுக்கு உபதேசித்தருளிய அறவுரைச் சுருக்கம் வருமாறு:—

"மனிதன் தவிர்ந்த மற்றப் பிராணிகளெல்லாம் குறுக்காய் வளர்கின்றன. மனிதனே மேல்நோக்கி வளர்கின்றான். இந்தஇயற்கைநிகழ்ச்சி கருதற்பாலது. மனிதன் மேல்நோக்கி வளர வேண்டுமென்பது ஈச்வரன் கருத்தென்று இதிலிருந்து தெரியவில்லையா. மனிதனுக்குக் கீழான பல சிருஷ்டிகளும் இருக்கின்றன. மனிதனுக்கு மேலான பல வஜீன்களும் இருக்கின்றார்கள் என்று நமது சாத்திரங்கள் கூறுகின்றன. மனிதனிலிருந்து கீழே செல்லச்செல்ல ஞானம் குறையும், மேலே செல்லச் செல்ல ஞானம் வளர்ந்து சிருஷ்டியின் தத்துவத்தில் நிறைவுறும். எனவே மனிதன் மனம் விண்ணோக்கிப் படரவேண்டும். அதைவிடுத்து மண்ணைக் கருதி அதற்குரிய பல வியவகாரங்களில் உழல்வதைக் கருமமாகக் கொண்டு மனிதர் வீணே இழிந்து வருகின்றனர். அப்படிச் செய்வது ஈச்வர விருப்பத்திற்கு மாறான காரியமாகும். எனவே நாம்நமது நாட்டத்தை மேல்செலுத்தி வளரவேண்டும். இதுவே மனிதப்பிறவியின் ஒரு காரியமாக வேண்டும்."

***

**110 கோடி விலை மதிப்புள்ள போன்:**—சிலமாதங்களாக இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குத் தங்கம் ஏற்றுமதியாகின்றது. இதுவரை 110 கோடி ரூபாய் விலைமதிப்புள்ள பொன் இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாயிருக்கின்றதாம். சென்ற வாரத்தில் மாத்திரம் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பொன் ஏற்றுமதியாயிருக்கிறதென்று தெரிகின்றது.

***

**நிர்வாண சங்கம்:**—இதுவரையில் மேல்நாடுகளில் கேள்விப்பட்டிருந்த நிர்வாண இயக்கம் இந்தியாவிலும் தோன்றிவிட்டது. பஞ்சாப்பில் உள்ள ஒரு காட்டுப்பிரதேசத்தில் அகில இந்திய நிர்வாண சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதாம். மக்களின் சுகாதார வாழ்க்கையை வளர்ப்பதே இச்சங்கத்தின் நோக்கமாம். இச்சங்கத்தைப்பற்றி மற்ற விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை.

***


**மணிக்கு 250 மைல்:**—ஸர் மால்காம் காம்பல் என்னும் இங்கிலாந்து வாசி மணிக்கு 244½ மைல் வீதம் மோட்டார் வண்டியை நடத்துவாராம். இவர் திறம் மோட்டார் ஓட்டுபவர் இப்பொழுது மேனாடுகளில் இல்லையாம். இன்னும் அதிக வேகமுடன் மோட்டார் ஓட்ட முயன்று வருவதாகச் சொல்லுகிறாராம்.

***

**புதிய கத்தி:**—லண்டனிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் ரத்தம் வடியாமல் ரணசிகிச்சை செய்வதற்குரிய கத்தி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதாம். அக் கத்தியில் மின்சார சக்தி ஆபரேஷன் செய்யுங்கால் உண்டாகி இரத்தக் குழாய்களை அடைத்து இரத்தம் வராமல் செய்கிறதாம்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

| டானிக்குகள் : | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |




| தைலங்கள்: | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. | 1-0-0 |
| அமிர்தாமலக ,, | 0-12-0 |
| பிருங்காமலக ,, | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மட.ச்யாவனப்ராசா மட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மட.டீ, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

மட. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்டாலகஸ்
ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

(89140

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு | ரூ. | 1 | 0 | 0 |
| 5 டப்பிகள் | ரூ. | 4 | 0 | 0 |

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவினோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)